பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 22 07-08-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 170

## அரசாங்க துறை அலுவலர்களின் சம்பளம் மறுசீரமைப்பு

அரசாங்கத்துறையின் அலுவலர்களின் சம்பளங்களை இம் மாதத்திலிருந்து அரசு மறுசீரமைத்துள்ளது. சம்பள மீளாய்வின் அடிப்படையில் எழுதுவினைஞர்கள் மற்றும் அதற்கு சமமான சேவைகளின் சுப்றா தரத்தின் ஆரம்பச்சம்பளம் 45, 120 ரூபாவிலிருந்து 47, 640 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முதலாம் தர அதிகாரிகளின் சம்பளம் 41, 520 ரூபாவிலிருந்து ஆரம்பமாகும் இந்த தரத்திற்கு இதுவரை இருந்த சம்பள அளவுத் திட்டம் 34, 920 ரூபா வாகும் பிரிவு ii 'அ' தரத்திற்

(6ஆம் பக்கம் பார்க்க)

# 42மணிநேரம் முகாமிற்குள் புலிகள் காத்திருந்தனர்

## பலாலி தாக்குதல் குறித்து ஐலண்ட்

(கொழும்பு)

கடல்வழியாக பலாலி முகாமினுள் புகுந்த விடுதலைப் புலிகள் இரு சியாமார் செட்டி குண்டுவீச்சு விமானங்களையும் பெல் 212 ஹெலிகப்டரையும் தாக்குவதற்காக 42 மணிநேரம் காத்திருந்ததாக ஐலண்ட் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் தாக்குதலில் கருணாதிலக என்னும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இச்சம்பவத்தில் பலியானார். ஹெலிகப்டர் நிர்மூலமாக்கப்பட்டது தாக்குதல் நடந்தவுடனேயே சியாமார்செட்டி விமானங்களிரண்டும் தளத்தைவிட்டு வெளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அடையாள வேலை நிறுத்தம்

பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் ஒய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரி, அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் செய்துவரும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து, யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் நாளை ஒருநாள் பொது வேலை நிறுத்தம் செய்யவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு ஊழியர்களைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு இணைப்பு ஐ. தே. க. செய்த துரோகம்

## அஸ்கிரிய பீடாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிங்கள மக்களினதும் பௌத்த மத குருமாரினதும் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்க நடவடிக்கைஎடுத்த **தன் மூலம்** ஐக்கிய தேசியக் கட்சி பெரும் துரோகமிழைத்து விட்டது என அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்பலிப்பான சிறீ சந்தானந்த சிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் உருவாக்கப்பட்ட இம்மாகாண சபை தொடர்பான இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட எந்த எதிர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



மேஜர் நெடுஞ்செழியன் (றம்போ)

முல்லை மாவட்டத்தில் கடந்த 4-ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஒய்வூதிய வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

புகையிரத உள்ளூராட்சி சேவை ஒய்வூதிய வவுச்சர்கள் தவிர்ந்த மற்றைய ஒய்வூதிய வவுச்சர்கள் திங்கட்கிழமையளவில் றுகுணு கப்பலில் எடுத்துவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, எடுத்துவரப்படும் ஒய்வூதிய வவுச்சர்கள் முடிந்தளவு விரைவில் அனுப்பப்படுமெனவும் புகையிரத உள்ளூராட்சி ஒய்வூதிய வவுச்சர்கள் அடுத்துவரும் கப்பலில் எடுத்து வரப்படும் எனவும் தெரிய வருகிறது.

### ஊர்காவல்படை சுட்டுக்கொலை

திருகோணமலை றெட்திறிபிட்டி என்ற இடத்தில் கடந்த முதலாம்திகதி அதிகாலை ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரிடமிருந்து சொட்கண் -1, காட்றச் -5 என்பன கைப்பற்றப்பட்டன.

# வடக்கு தேர்தலை நிறுத்த எனக்கு அதிகாரம் கிடையாது

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தேர்தலை நடத்தமுடியாது எனக் கூறி அதனை நிறுத்துவதற்கு எனக்கு அரசியல் அமைப்பு ரீதியாக அதிகாரம் கிடையாது என சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. சியின் சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு தேர்தல் ... கையில், அரசாங்கம் தேர்தலை நடத்துமாறு தன்னி ... என்றார்.

இதே வேளை நாட்டில்

### 189பேருக்கு நியமனம்

கொள்கைத் திட்டமிடல், செயற்திட்டமிடல் அமைச்சினால், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான, 189 நியமனக் கடிதங்கள் யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நியமனக் கடிதங்களை உரிய

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### ஐ. தே. கவினரின் சொத்துவிற்பனை

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பல சிரேஷ்ட உறுப்பினர் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதைவிட தமது சொத்துக்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருவதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வானொலிக்கு தேர்தல் ஆணையாளர் அளித்த பேட்டியிலே மேற்கொண்ட கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்

தலை நடத்துமாறு தன்னிடம் வேண்டுகோள் விடுத்தால் அதனை எந்த வழியிலும், நடத்த வேண்டும் என்றும் இதுதான் தன்னிடம் வழங்கப்பட்ட பொறுப்பும்

இதே வேளை நாட்டில் பல இக்கட்டான நிலையில் தேர்தல் பலவற்றை நடத்தி இருப்பதாகவும் தெரிவித்த அவர், இதே நிலையில்தான்
(6 ஆம் பக்கம் பார்க்க)

இதேவேளை தமது சொத்துக்களை தமது உறவினரின் பெயரில் மாற்றுவது போன்ற நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மாவீரர்களுக்குவீரவணக்கம்செலுத்தி கோட்ட ரீதியாக இன்று கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)
பலாலி விமானப்படைத் தளத்தினுள் ஊடுருவிச் சென்று வெற்றிகரமாகக் கரும்புலித் தாக்குதல் நடாத்தி வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் முகமாக இன்று கோட்ட ரீதியாக மூன்று பொதுக் கூட்டங்கள் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

நேற்று முதல் கோட்ட ரீதியாக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டுக் கொண்டிருக்கும் மாவீரர்களது உருவப்படங்கள் கூட்ட நிகழ்விடத்துக்கு
(6 ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள் உருவப்படங்கள் குடாநாடெங்கும் நேற்று பவனி

(யாழ்ப்பாணம்)
தமிழீழத் தேசிய விடுதலைப்போராட்டத்துக்கு வீறு சேர்க்கும் வகையில் பலாலிப் படைத் தளத்தினுள் புகுந்து வீரசாதனை படைத்த கரும்புலிகளுக்கு இரண்டாவது நாளாகவும் குடாநாட்டில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

பலாலிப்படைத்தள வெற்றியை நினைவு கூரும் வகையிலும் இத்தாக்குதலில் வீரச்சாவடைந்த கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் சடந்த இருநாட்களாக எழுச்சி பூர்வமான நிகழ்வுகள் குடாநாடெங்கும் நடைபெற்றுவருகிறது.

ஊர்திபவனிகள், அலங்
(6 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையினரின் சூட்டுக்கு தந்தையும் மகனும் பலியாகினர்

## சக்கோட்டை கடற்பரப்பில் சம்பவம்

(வடமராட்சி)
பருத்தித்துறை சக்கோட்டைக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கி வேட்டுக்கு தந்தையும் தனயனும் ஸ்தலத்தில் துடிதுடித்து பலியாகினர். இருவரது சடலங்களும் கடலில் கைவிடப்பட்டன.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் நடைபெற்றது.

காங்கேசன்துறையில் இருந்து வெற்றிலைக்கேணி நோக்கி சென்றுகொண்டிருந்த டோறா விசைப்படகில் இருந்து வந்த வேட்டுக்கே அப்பாவி மீனவர்கள் இருவரும் பலியாக நேரிட்டது.

சக்கோட்டை வாசிகளான ஏழு பிள்ளைகளின் தந்தை மரியாம்பிள்ளை-யோசப்(43) என்பவரும் இவரது மகன் யோசப்-மோசேஸ்தயான்(22)
(6 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர்மீது கடற்படை கைக்குண்டு வீச்சு

(வடமராட்சி)
வடமராட்சி கடற்பரப்பில் ரோந்து செல்லும் சிறிலங்கா கடற்படையினர் கடலில் தொழில் செய்யும் மீனவர்கள் மீது கிரனைட் வீசி வருகின்றனர்.

கடற்படையினரின் கிரனைட் வீச்சுக்கு இலக்காகி கடந்த வியாழன்காலை கற்கோவளம் கடற்பரப்பில் மீனவர் ஒருவரின் கட்டுமரம் சேதமடைந்தது. எனினும் மீனவர் தப்
( 6 ஆம் பக்கம் பார்க்க )

# பொலிஸ் கீழ்மட்டத்தினர் பொ. ஐ. முவுக்கு ஆதரவு

## ஐ. தே. க. செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)
பொலிஸ் கீழ்மட்டங்களில் பணிபுரிபவர்களில் பெரும்பாலானவர்களும், உயரதிகாரிகள் சிலரும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக செயற்படுவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களைத் தாக்குவதாகவும் ஐ. தே. க. பொதுச் செயலாளர் கலாநிதி காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

சந்தேசியவுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அப்போது அவர் மேலும் கூறுகையில், பொலிசார் கட்சி சார்பற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், வேண்டுகோள் விடுத்தார்.

# மக்கள் வங்கிக்கு எழுதுவினைஞர் நியமனம்

[யாழ்ப்பாணம்]
மக்கள் வங்கி எழுதுவினைஞர் சேவைக்கு 22 பேரை நியமனம் செய்வது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடியும் வரை நியமனங்கள் செய்யப்படக் கூடாதென மந்திரிசபை தீர்மானித்திருப்பதால் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர்களுக்கான நியமனம் தொடர்பாக வங்கி சபையினால் வெற்றிடங்கள் பற்றி தீர்மானிக்கப்பட்டு வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை
( 6 ஆம் பக்கம் பார்க்க )

# புலிகள் இதுபோன்ற தாக்குதலை இதுவரை முகாமிற்குள் நடத்தவில்லை

## பலாலி தாக்குதல் குறித்து பிரிகேடியர் குலதுங்க

(கொழும்பு)
பொதுத்தேர்தலைகுழப்பும் விதத்தில் விடுதலைப்புலிகள் நடவடிக்கை எதுவும் எடுப்பதாக தெரியவில்லை பலாலி முகாம் மீதான தாக்குதல் தேர்தலுடன் சம்பந்தப்பட்டதல்ல புலிகளின் வழமையான நடவடிக்கைகளில் ஒன்றே அது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் குலதுங்க செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புலிகளின் பலாலி முகாம் தாக்குதல் குறிப்பிடத்தக்க தொன்று. இதற்கு முன் இப்படியொரு தாக்குதலை புலிகள் முகாமிற்குள் நடத்தவில்லை எனவும் பிரிகேடியர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணிலும் கலந்து கொண்டார். அங்கு மேலும் பிரிகேடியர் குலதுங்க விபரிக்கையில், பலாலி தாக்குதலையடுத்து புலிகளை தேடும் நடவடிக்கை தீவிரமாகியுள்ளது இராணுவத்தளபதியும் ஏனைய தளபதிகளும் பலாலி
( 6 ஆம் பக்கம் பார்க்க )

# யார் வெற்றி பெற்றாலும் அதிகாரம் என்னிடமே

## டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத் தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் அமைச்சரவையை அமைக்கப்போவது தனது அனுமதிக்குப்பின்னர்தான் என்றும் புதிய பாராளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்கப்போவது தானே என்றும் எனவே மக்கள் மிகுந்த அவதானமாக யோசித்து வாக்களிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்

அவர் மேலும் கூறுகையில்; பாராளுமன்றம் புதியதாக அமைக்கப்பட்டாலும் முப்படைகளும், பொலிசாரும் எனக்கு கீழேயே செயல்பட வேண்டும் என்பதினால் யாரும் ஒன்றும் செய்ய முடியாது; இறுதித் தீர்மானங்களை எனது கைப்படவே
( 6 ஆம் பக்கம் பார்க்க )

# ஜனாதிபதியின் போக்கு சிவில்யுத்தத்தைஏற்படுத்தும்

(கொழும்பு)
மக்களால் வழங்கப்படும் அதிகரத்தைவிட அரசியல் அமைப்பின் மூலம் கிடைத்த அதிகாரத்தை ஆயுதமாக ஜனாதிபதி பாவித்தால் நாட்டில் வன்முறை வெடிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும் என 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

இவ் வன்முறை ஒரு சிவில் யுத்தமாகக் கூட பரிணமிக்கக் கூடிய நிலை ஏற்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றும் எனவே இதனைக் கருத்தில் கொண்டு மக்களின் குரலுக்கு ஜனாதிபதி மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தால் அது ஐ. தே. க.
( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## சுருக்கெழுத்தாளர் பயிற்சி

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையும் இணைந்து நடாத்தும் ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி வதிரியில் 15 - 9 - 94 ல் ஆரம்பிக்கப்படவுள்ளது. 30 - 8 - 94 ற்கு முன் வதிரியில் உள்ள பயிற்சி நிலையத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும். ஊக்குவிப்புத் தொகை மாதாந்தம் ரூபா 450|- வழங்கப்படும்.

(9045)

## பலாக்கன்று

நல்ல இன பலாக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. பத்து வெற்றுப் பால்மா பைக்கற்றுகள் கொடுத்து பெற்றுக் கொள்ளவும்: ''மில்க்வைற்''

(சி-10064)

## விற்பனைக்கு

பான்ரைல் (FANTAIL) புறாக்கள் விற்பனைக்குண்டு 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (9044)

## திருத்தவேலைகள்

உங்கள் குழந்தைகளின் பழுதடைந்த பாடசாலைப் பைகளை இந்த விடுமுறையில் எம்மிடம் ஒப்படைத்து மறுசீரமைத்துக் கொள்ளுங்கள்: ராம்சன்ஸ் சுதுமலை வடக்கு மானிப்பாய். (9040)

## ஜோதிட விஞ்ஞானமும் கைரேகை சாஸ்திரமும்

எண்ஜோதிடம், ஜெனன கால ஜாதகக் குறிப்புகள், விவாகப் பொருத்தங்கள், பார்வையிட, கணிக்க, தினமும் காலை 6 மணிமுதல் காலை 9 மணி வரையும் ஞாயிறு சந்திக்கலாம். ''சத்யா'' -இடிகுண்டருகே கட்டுடை

(9047)

## தவறிவிட்டது

6-8-94 பி.ப 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் சாவகச்சேரி கனகம் புளியடிச் சந்திக்கும் மட்டுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு தொகைப் பணம் தவறிவிட்டது. கண்டெடுக்கவர்

# ஐ.தே.கவின் பக்கமாகவே மக்கள் அலை உள்ளது

**- ரணில் விக்கிரமசிங்கா**

(கொழும்பு)

ஐ.தே.கவிற்காக திரளும் மக்கள் கூட்டத்தைக் கண்டால், சிறிமாவோவும், சந்திரிகாவும் சிங்கப்பூருக்கே ஓடிப் போய் விடுவார்கள். இவ்வாறு பிரதமரும், ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

மாவனல்ல, ஹெம்மத்தாகம, வில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் மக்கள் அலை ஐ.தே.கவின் பக்கம் எத்துணை பலமாக அடித்து வருகிறது என்பதனை நான் போகுமிடங்களில் எல்லாம் காண்கிறேன். எமது கட்சி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், நமது கொள்கைகள் மூலம் நாட்டை முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கையுமே இந்த சன சமுத்திரம் திரளக் காரணம் ஆகும்.

பொதுசன ஐக்கிய முன்னணியினர் தர்க்க ரீதியற்ற ஆதாரமற்ற உறுதி மொழிகளைக் கூறி வருகின்றனர். இதற்கு இந் நாட்டு மக்கள் ஏடுபடப் போவதில்லை. தாம் பதவிக்கு வந்தால் பெற்றோல், டீசல் விலை குறையும் என்றும், பாண் விலை குறைக்கப்படும் என்றும், பஸ் கட்டணம் குறையும் என்றும் இவர்கள் கூறி வருகின்றனர். ஆனால் இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து கிடைக்கும் என்பதை மட்டும் அவர்கள் கூறுவதாக இல்லை எனவும் தெரிவித்தார்.

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(பருத்தித் துறை)

பருத்தித்துறை முனை அன்பு பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி பாலர் பாடசாலை பெற்றார் சங்கத் தலைவி திருமதி மேரி பவளராணி பீற்றர் தலைமையில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறுகின்றது. கடற்புலிகள் வடமராட்சி பொறுப்பாளர் திரு. விக்னம் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைக்கிறார்.

(25)

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை வட்டு தென்மேற்கு ஸ்ரீவிநாயகர் பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2-00 மணிக்கு இலுப்பையடி ஸ்ரீவைரவர் கோவில் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய இயக்குனர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளார். (24)

## சுகாதார ஆய்வு

(தொல்புரம்)

மானிப்பாய் பட்டினப் பகுதியில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் சுகாதார ஆய்வுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள மேற்படி பகுதிகளில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் காணப்படும் மலசலகூடம், கிணறு போன்றவற்றின் சுகாதாரச் சீர்கேடுகள், தொற்றுநோய்கள் பற்றிய கணிப்பீடுகள்கர்ப்பிணித் தாய்மார்களின் நலன்கள், 1 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் போசாக்கு நிலைமை, குடும்ப நிலை விபரம் போன்ற அத்தியாவசியமான விபரங்கள் சுகாதாரப் பணியாளர்களினால் திரட்டப்பட்டன. (41)

## இரணைமடுக் குளம் புனரமைப்பு

கடந்த மார்கழி மாதம் பெய்த கடும் மழையினால் வடதமிழீழத்திலேயே பெரிய குளமான இரணைமடுக்குளத்தின் வெள்ளத்தினால் பாதிப்படைந்திருந்த பகுதிகள் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இப் புனரமைப்பு வேலையானது கிளிநொச்சி தேசநிர்மாணிகளால் துரித நீர் வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சு. கட்சியும் இன்று இல்லை கைச் சின்னமும் இல்லை

- டாக்டர் நெவில் பெர்னாண்டோ


யாழ் திருநகர் பாரதி சனசமூகநிலையம்

## நன்றி நவிலல்

யாழ் திருநகர் பாரதி சனசமூக நிலையத்தின் 36 வது ஆண்டு விழாவையொட்டி, பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாநகரசபை ஆணையாளர் இல்ல விளையாட்டுப்போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்,

இவ்விழாவை சிறப்பிக்கும் முகமாக அன்பளிப்பு வழங்கியவர்கள்:-

01, பங்குத்தந்தை. யாழ் ஆசனக்கோயில்
02, அதிபர், சம்பத்திரிசியார் கல்லூரி
03, திருமதி கஸ்பார் அன்ரன்
04, லக்கி, உரிமையாளர் பாஷையூர் 1-ம் இலக்க இறைச்சிக்கடை
05, தாவீது, உரிமையாளர் கொக்குவில் 1-ம் இல. இறைச்சிக்கடை
06, சில்வெஸ்ரர், உரிமையாளர் நரியம்குண்டு 1-ம் இலக்க இறைச்சிக்கடை
07, வின்சன் நோய்பிறின்ஸ், உரிமையாளர் யாழ் சின்னக்கடை 1-ம் இல, இறைச்சிக்கடை
08. ஆனந்தன் உரிமையாளர் பாசையூர் 2-ம் இல. இறைச்சிக்கடை
09. சுகுணாஸ் புடவை மாளிகை, நவீனசந்தை யாழ்.
10. லிங்கம் ஆடையகம், நவீனசந்தை யாழ்.
11. யாழினி அழகு மாடம் நவீன சந்தை யாழ்,

இவர்களுக்கு எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(9050) நிலைய நிர்வாகிகள்



# இதோ!

"ஒரு பவுண்" பெறுமதியான தங்கப் பதக்கம் பரிசு

நல்லூர்த் திருவிழாவில் நடைபெறவுள்ள தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்

வினாவிடைப் போட்டி

போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் நீங்களே அந்த தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல சுற்றுக்களாக நடைபெறவுள்ள இப்போட்டியில் சுற்றுக்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு

★ வெற்றிக் கேடயங்கள்
★ பெறுமதிமிக்க பரிசில்கள்
★ சான்றிதழ்களும்

வழங்கப்படும்

தமிழீழத்தின்

★ பௌதீகச் சூழல் ★ வளர்ச்சி
★ பௌதீக வளம் ★ வரலாறு
★ குடித்தொகை ★ அரசியல்
★ பொருளாதார அமைப்பு ★ தமிழீழ சட்டம்

ஆகியன பற்றியதாக கேள்விகள் அமையும்.


# மலையக எதிர்காலத்திற்கு இ.தொ.கா வெற்றிபெறட்டும்

**- ஆறுமுகம் தொண்டமான்**

(கொழும்பு)

மலையத்தின் எதிர்கால நன்மை கருதி இ.தொ.காவின் வெற்றியை உறுதிப்படுத்துங்கள் இவ்வாறு அமைச்சர் தொண்டமானின் பேரனும், இ.தொ.கா நுவரெலிய மாவட்ட வேட்பாளருமான ஆறுமுகம் தொண்டமான் கேட்டுக்கொண்டார்

நுவரெலியா மாவட்டம் கோட்லொட்ஜ்தோட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மலையக மக்கள் தமது உரிமைகளை இழந்து இருந்தபோது எவரும் அவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை இலங்கையில் ஒதுக்கப்பட்ட ஒரு சமூகமாக அவர்கள் வாழ்ந்தனர் வாக்குரிமையும் பிரஜாவுரிமையும் பெற்றுக்கொடுக்கப்பட்ட பின்னர் இப்போது புற்றீசல்கள் போல பலரும் வாக்கு வேட்டைக்காக மலையகப்பகுதிக்கு வருகின்றனர். நாம் எவரையும் குறைகூறி வாக்குக் கேட்கவில்லை. ஆனால்இ தொ. காவின் கடந்த கால செயற்பாடுகள் உங்களுக்கு நன்கு தெரியும் எனவே எதிர்கால நன்மை கருதி இ தொ காவின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்

நுவரெலிய மாநகர துணை மேயர் கே, விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றஇக் கூட்டத்தில், நுவரெலியா மாவட்ட வேட்பாளர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுமான எஸ் சதாசிவம், எம். சிவலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்

# நினைவுகூருகின்றோம்,. 07-08-1994...

1989-ம் ஆண்டு மணலாறு - அளம்பில், நாயாற்றுப்பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**வேந்தன்** (சண்முகம் பவளராசா - நிலாவெளி திருமலை)

**தீசன்** (வேலுப்பிள்ளை மகேஸ்வரன் - தம்பசிட்டி, அம்மன்கோயிலடி - பருத்தித்துறை)

**கர்ணன்** (சிவப்பிரகாசம் சிவகுமார் - சரசாலை தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**ஜேம்ஸ்** (சிவசுப்பிரமணியம் மணிவர்மன் - சந்தை ஒழுங்கை, பருத்தித்துறை - யாழ்)

1990-ம் ஆண்டு யாழ் - நல்லூர் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய,

**பவி** (சுப்பிரமணியம் சிவராஜா - புற்றளை, புலோலி கிழக்கு - பருத்தித்துறை - யாழ்)

யாழ் - அத்தியடி, அம்பலவாணர் வீதியிலிருந்த எமது முகாமொன்றின்மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீசசில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான;

**ராசன்** (செல்வரத்தினம் செல்வகுமார் - நாயன்மார் கட்டு - யாழ்ப்பாணம்)

**மாம்பழம்** (காசிலிங்கம் சிவபாலன் - நாயன்மார் கட்டு - யாழ்ப்பாணம்)

1991-ம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**திசா** (சிவபாதலிங்கம் சிறீதரன் - இரணைஇலுப்பைக் குளம் - வவுனியா)

**இருணா** (குப்புச்சாமி மூர்த்தி-3-ம் வாய்க்கால், பரந்தன் - கிளிநொச்சி)

**குணேஸ்** (கறுப்பையா திவாகரன் - தலைமன்னார் துறைமுகம் - மன்னார்)

**மேஜர் ஜொனி** (நாகநாதி ஜெகதீஸ்வரன் - மீசா

தொகைப் பணம் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்; யோகலிங்கம் சிவனேஸ்வரன், வட்டக்கச்சி.

(9054)

**விற்பனைக்குண்டு**

No. 7, அலர் தகரப்பெட்டியுடன் விற்பனைக்குண்டு, பிள்ளையார் மில் தாவடி, மானிப்பாய் வீதி, தாவடி.

(சி-10068)

## அரச ஊழியர்கள் இடமாற்றம் ரத்து

அரச சேவையில் உள்ளவர்களின் சகல இடமாற்றங்களும் ஒத்திப் போடப்பட்டுள்ளது. இது பொதுத் தேர்தலின் பின்பே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிய வருகிறது.

(88)

## றேடியோ திருத்தல் பயிற்சி நெறி

யாழ் கல்வித்திணைக்கள (வலயம் 02) முறைசாராக் கல்விப்பிரிவு பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்கான றேடியோ திருத்தல் பயிற்சிநெறியை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சிநெறியில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த றேடியோ திருத்தல் பயிற்சிநெறியைப்பூர்த்திசெய்பவர்களுக்கு யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக்கல்விப்பிரிவுசான்றிதழ்களையும் வழங்கவுள்ளது

(25)

-டாக்டர் நெவில் பெர்னாண்டோ

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் அரசியல் கட்சியொன்று இப்போது இல்லை அக் கட்சிக்கு சொந்தமான கைச் சின்னமும் இப்போது இல்லை. அங்கும் இங்குமாக தேடிச் சேகரித்த துண்டுகளைத் தொகுத்துக் கொண்ட அரசியல் முன்னணி மட்டுமே உள்ளது. அக்கட்சியிடம் உறுதியானதும், நிலையானதுமானகொள்கைகள் இல்லை ஆனபடியால் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் வாக்குச் சீட்டில் கைச் சின்னம் இல்லாது விட்டால் ஐ தே. கவை ஆதரிக்க வேண்டும்.

இவ்வாறு களுத்துறை மாவட்ட ஐ தே. க வேட்பாளரான டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார். களுத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இன்று இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளிலேயே தூய்மையும் விளக்கமும் கொண்டது. ஐ. தே. கவே ஆகும் எனவும்குறிப்பிட்டார்.

## எத்தகைய மாற்றம் தேவை எதிர்க்கட்சி கூற வேண்டும்

-ஏ.சீ.எஸ். ஹமீத்

(கொழும்பு)

''எதிரணியினரும், அவர்களது ஆதரவாளர்களும் இன்று அரசியலில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று கூச்சல் இடுகின்றனர். அது எத்தகைய மாற்றம் என்பதையும், என்ன மாற்றங்கள் என்பதையும் அவர்கள் பொது மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும். மாற்றம் வேண்டுமென்பதற்காக கட்சியை மாற்றுவது மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.''

இவ்வாறு வெளி விவகார அமைச்சர் ஏ.சீ.எஸ் ஹமீட் தெரிவித்தார். கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், எதிர்க்கட்சியினர் கூறி வரும் மனிதாபிமான முறையிலான மாற்றம் எது என்பதை பொது மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும் எதிர்க்கட்சி பலமான ஒரு கட்சியாக இல்லை. அது பல கட்சிகளின் கூட்டணி. கொள்கை முரண்பாடான இக் கூட்டணியினால் ஒரு வருடம் கூட பதவியில் நீடிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

## கோழித் திருட்டு அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் அநேக இடங்களில் கோழிகள் களவாடப்படுவது அதிகரித்து வருகின்றது. கல்வயல், நுணாவில், சாவகச்சேரி பகுதிகளில் தினசரி இரவு வேளைகளில் வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகள் கூட்டோடு தூக்கிச் செல்லப்படுவது இடம் பெற்று வருகிறது. கல்வயல் பகுதியில் வசிக்கும் மில் உரிமையாளர் ஒருவரது வீட்டில் ஒரே இரவில் முப்பதுக்கும் அதிகமான கோழிகள் திருடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(86)


ஆகியன பற்றியதாக கேள்விகள் அமையும்.

**போட்டிக்கான விதிகள்:**

★ 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

★ தமது விண்ணப்பங்களை கல்லூரி அதிபர் அல்லது கிராம சேவை அலுவலர் அல்லது கிராமிய உற்பத்திக்குழுத் தலைவர்களைக் கொண்டு உறுதிப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

★ விண்ணப்ப முடிவுத் திகதி 15-8-1994

★ விண்ணப்பங்களை

**"தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்"**

**உட்கட்டுமானப்பகுதி**
**தமிழீழ பொருண்மிய**
**மேம்பாட்டு நிறுவனம்**
**இல. 10, சம்பியன் வீதி,**
**கொக்குவில்.**

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

★ இதற்கான விண்ணப்பப் படிவங்களை சகல புத்தக சாலைகள், கிராமிய உற்பத்திக் குழு அலுவலகங்கள், உட்கட்டுமானப்பகுதி ஆகிய இடங்களில் 5/- ரூபா செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்;

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-10066)



சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ--து)
சுன்னாகம்

**தற்காலிக சாரதி பதவி**

மேற்படி சங்கத்தினால் தற்காலிக சாரதி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களையும், தகைமைகளையும் சங்க வேலை நாட்களில் ரூ 10/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 22.08.94**

**பொது முகாமையாளர்**

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்
06-08-94

(சி/10065)


மேஜர் ஜொனி (நாகநாதி ஜெகதீஸ்வரன் - மீசாலை வடக்கு, சாவகச்சேரி - யாழ்)

1992-ம் ஆண்டு திருமலை - மூதூர் கதியால்சேனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் கொல்லப்பட்ட எமது நாட்டுப்பற்றாளரான,

**புண்ணியம் - பாலசிங்கம்**- பூநகர், ஈச்சிலம்பத்தை - திருமலை)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா - இந்தியப் படைகளினாலும், தேசவிரோத சக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**
**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(சி-10062)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு: | | வீரச்சாவு: |
| --- | --- | --- |
| 04 |  | 07 |
| — | | -- |
| 05 | | 08 |
| — | | — |
| 1973 | | 1989 |

**கப்டன் ஜேம்ஸ்**
**(சிவசுப்பிரமணியம் மணிவர்மன்)**

இன்று 07-08-1994 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் சக போராளிகளையும், உற்றார், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜேம்ஸ் வீதி,
(சந்தை மேற்கு ஒழுங்கை)
பருத்தித்துறை. (9049)

சிவசுப்பிரமணியம்
குடும்பத்தினர்,
சகோதரர்கள்.

''தனி மனிதப் போட்டி என்ற நிலையில் இருந்து கூட்டுழைப்பில்தனித்துவம்என்ற நிலைக்கு மனித முயற்சியை நெறிப்படுத்துவதே கூட்டுறவு''
- தோமஸ்கார்லைல் -

# வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடாத்தும்

# 72-வது சர்வதேச கூட்டுறவு தினவிழா-1994

''சமூகநீதி வழங்கி தொழிற்பிரச்சினைகளை மாற்றி அமைத்து எல்லா நலன்களும் பெற வழி வகுப்பது கூட்டுறவு''
- ஜான் ஸ்டுவர்ட் மில் -

## எங்கள் சங்கம் பற்றி...

**1991** ஐப்பசி மாதம் 18-ம் திகதி இலங்கை இராணுவத்தின் அடாவடித்தனம் காரணமாக தீவக மக்கள் 99% மானவர் (நயினாதீவு - நெடுந்தீவு. அனலைதீவு தவிர) யாழ்ப்பாணத்தை நோக்கி இடம் பெயர்ந்த வரலாறு சகலரும் அறிந்ததே. வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரை இவ் விடப்பெயர்வு ஸ்தாபன ரீதியில் பாரிய பொருளாதார நிதி, பொருட்கள் சார்ந்த இழப்புக்களையும் முற்று முழுதான அதன் சொத்துவள இழப்புக்களையும் ஏற்படுத்தியது. மக்களின் இடப்பெயர்வோடு வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் குறிப்பாகச் சொன்னால் வெறும் கையோடு யாழ்ப்பாண நகர் நோக்கி இடம் பெயர்ந்தது.

ஒரு நாடாயினும் சரி கிராமமாயினும் சரி, அல்லது ஸ்தாபனங்களாயினும் சரி அவை முற்று முழுதாக அந்நியரால் அழிக்கப்படும் போது, அல்லது அழிக்கப்பட்ட பின்பு தேசப் பற்று, கிராமப்பற்று, ஸ்தாபனப்பற்று. கூட்டுறவுப் பற்று மற்றும் வேறும் பல காரணங்களால் வீறு கொண்டெழுந்ததை, எழுவதை நம் கண்முன்னாலேயே காண்கின்றோம். சாம்பல் மேட்டிலிருந்து தளிர்த்தெழுந்த பல வரலாறுகளை நாம் அறிவோம்.

யாழ்ப்பாணம் நோக்கி சங்கம் இடம்பெயர்ந்த பின்பு அது தன்னை ஸ்திரப்படுத்தவும், புனரமைப்புச் செய்து, தனது இடம்பெயர்ந்த மக்களுக்கும், அங்கத்தவர்கட்கும், அகதி முகாம்களில் வாழும் தனது மக்களுக்கும் தனது சங்கப்பரப்பிலுள்ள பாடசாலைகட்கும், அளிக்க வேண்டிய தேவையை, சமுதாயக் கடமையை உணர்ந்து பொறுப்புடன் வேகமாகவும், விவேகமாகவும் செயல்பட்டது. இதன் முதற்கட்டமாக சங்கம் வர்த்தக ஆய்வு, நிதிசார் ஆய்வு, பொருளாதார ஆய்வை தனது மட்டத்தில் மேற்கொண்டு விரைவாகச் செயற்பட்டதனால் இன்று ஒரு ஸ்திரத் தன்மையை அடைந்து தனது சொந்தக் காலில் நிற்கின்றது.



திரு. பொ. மாசிலாமணி
தலைவர், வேலணை ப. நோ. கூ. சங்கம்

சங்கம் இடம்பெயர்ந்தபின்பு பின்வரும் செயற்பாடுகளையும் அதாவது தீவகத்தில் செய்த சேவைகளை இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்தது.

அ. இடம்பெயர்ந்த மக்களில் 95% மானோர் நிவாரணத்தில் தங்கியிருந்தமையினால் உடன் நிவாரணம் வழங்கப்படுவதற்காகப் பிரத்தியேகமாக நிவாரணக் கிளைகளைத் திறந்து நிவாரணம் வழங்க ஏற்பாடு சங்கத்தால் செய்யப்பட்டது. இன்று எட்டு நிவாரணக் கிளைகள் மூலம் மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆ. மண்ணெண்ணெய்விநியோகம்:- 1991பிற்பகுதி 1992 காலப்பகுதியில் (யாழ். செயலக மூலம்மண்ணெண்ணெய் சங்கங்கட்கு வழங்க முன்பு) மண்ணெண்ணெயின் விலை மிக உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளை (சில சந்தர்ப்பங்களில் லீற்றர் ரூபா 200/-, 250/- வரை போனது) சங்கம் தற்துணிவோடு பல இன்னல்கட்கு மத்தியிலும் லொறிகள் மூலம் கொழும்பிலிருந்து மண்ணெண்ணெயைத் தனது சங்கத் தேவைக்கும் மேலதிகமாகக் கொண்டு வந்து தனது சங்க அங்கத்தவர்கட்கும், மக்களுக்கும் மட்டுமல்லாது யாழ். மாவட்ட மக்களுக்கும் விநியோகித்ததுடன் மண்ணெண்ணெயின் விலையையும் ரூபா 40/- ஆகச் சந்தையில் வீழ்ச்சியுறச் செய்தது. தற்போது சங்கம் மண்ணெண்ணெய் விற்பனை நிலையம் ஒன்றைத் தனியாக நடாத்துகின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### 1991 ஐப்பசிக்குப் பின் சங்கம் இடம்பெயர்ந்து யாழ். நோக்கி வந்தபின்:- சேவைகளில் சில.......

| | | |
|---|---|---|
| 01. | சிறுவர் போசாக்குத் திட்டத்திற்கு அன்பளிப்பு | 270,000.00 |
| 02. | கெற்பேலி பண்டிதர் குடியிருப்பு | 200,000.00 |
| 03. | புலமைப் பரிசில் (பாடசாலை) அன்பளிப்பு | 12,500.00 |
| 04. | பாடசாலைகட்கான அன்பளிப்பு | 200,000.00 |
| 05. | பணியாளர்கட்கான அபாயப்படி வழங்கியது | 440,610.00 |
| 06. | பணியாளர்கட்கான போனஸ் | 198,582.00 |
| 07. | கிராமிய வங்கி மூலம் அங்கத்தவர்கட்கு சுயமுயற்சி அபிவிருத்திக் கடன் | 115,000.00 |
| 08. | சுயமுயற்சிக்கடன் (வட்டியில்லாக் கடன்) | 28,750.00 |
| 09 | பணியாளர்கட்கு சுயமுயற்சிக்கடன் | 330,000.00 |

வே. செல்லத்துரை
பொது முகாமையாளர்
வேலணை ப.நோ.கூ.சங்கம்

## கூட்டுறவே நாட்டுயர்வு

''கூடிவாழ்ந்தால் கோடி நன்மை'' என்ற பொன்வாக்கை அடிநாதமாகக் கொண்டு பரிணமித்த கூட்டுறவு இயக்கம் இவ்வருடம் சர்வதேசக் கூட்டுறவு தினவிழாவெடுக்கும் இவ் வேளையில் வேலணை ப. நோ. கூட்டுறவுச் சங்கம் மக்களுக்கு ஆற்றும் சேவையும் பாராட்டுதற்குரியது.

இடம்பெயர்ந்த வேலணை மக்களுக்கு இல்லையென்னாது உணவு, உடை, உறையுள், ஊட்டச்சத்து, மற்றும் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டுப் போன்ற பல்துறையிலும் துணைபுரிந்து அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் அது என்றைக்குமே பின்னிற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் தன் பணிக்கும், வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும்உறு துணையாய்நின்றுழைத்த உத்தமர்களை-கூட்டுறவாளர்களை-இத்தினத்தில்அச்சங்கம்கௌரவிப்பதும்சாலச் சிறந்தது, காலத்தொடு செய்யும் கடமையுங்கூட. இக்கூட்டுறவுச் சங்கத்தின் சேவை என்றென்றும்மக்களுக்குத் தேவையாதலால் இவர்களின் பணி சிறப்புறத் தொடரவும், இவ்விழா இனிதே நிறைவு

## சேவையும் கூட்டுறவும்

யாழ்ப்பாணம் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியில் முன்னோடியாகத் திகழ்ந்து வந்தது. மக்களின் தேவைகள் பலவற்றை நிறைவேற்ற கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்காற்றின. ஐக்கிய நாணய சங்கங்கள், சங்கக் கடைகள், ஆஸ்பத்திரிகள், வங்கிகள், விவசாய, கைத்தொழில் உற்பத்தியாளர் சங்கங்கள் என்பன சிறந்த முறையில் சேவை புரிந்தமை யாவரும்அறிந்த விடயமே, ஆனால், கடந்த காலத்தில் அரசின் கொள்கைகளிலும் இன்று நிலவும் நெருக்கடிநிலையினாலும் எமது பிரதேச கூட்டுறவு நிறுவனங்கள் பல செயலிழந்து உள்ளன.

கூட்டுறவு இயக்கம் தீவுப்பகுதியில் 1960களிலிருந்து நன்முறையில் வளர்த்தெடுக்கப்பட்டது. ஊர்காவல்துறை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த காலங்களில் மக்களுக்குச் சிறந்த சேவையாற்றின. நுகர்வுப் பொருள்களினதும், உற்பத்திப் பொருள்களினதும் கொள்வனவும் விநியோகமும் செய்வதுடன், கல்வி வசதிகளையும் வழங்கி வந்தன. 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தீவு மக்கள் குறிப்பாக வேலணை

## செயற்திட்டங்களும் கூட்டுறவும்

கூட்டுறவுச் சங்கங்களது செயற்பாட்டு நடவடிக்கைகளில் வெற்றி காண வேண்டுமாகில், அவை கிராமமட்ட வாழ்க்கை நடைமுறைகளில் செய்திட்டங்களை உருவாக்கி யதார்த்தரீதியாக சமூகத்தின் பொருளாதார முன்னேற்றம், அங்கத்தவர்களது திறன்களை வலுப்படுத்துவதன் மூலமே முயற்சிக்கப்பட வேண்டும்,

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி இருபது வருடங்களுக்கு மேல் நானறிவேன். 77-ம் ஆண்டில் இச் சங்கம் தீவக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு மீண்டும் தனித்துவம் பெற்றது ஒரு காலம். இவ்வாறான காலத்திலும் கூட இச் சங்கம் அங்கத்தவர்களது சமூக, பொருளாதார, முன்னேற்றங்களுக்கான செயல் திட்டங்களிலிருந்து விலகவில்லை.

## வாழ்த்துரை

இலங்கையில் காலாகாலமாக தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு வந்துள்ளார்கள். அதே போல யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவகம் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. இந் நிலையை மாற்ற தீவக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. இன்று இடம்பெயர்ந்த நிலையிலும் அவை சிறப்பாகக் கடமையாற்றுகின்றன. இதற்கு வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சரியான உதாரணம்எனலாம். இப்போது இதனை தீவக மக்கள் மட்டுமன்றி யாழ்ப்பாண மக்களும் நன்கறிவர். இந் நிலையை அடைய இவ்வளவு காலமும் அதனை வழி நடத்தியவர்களும் இன்று வழி நடத்துபவர்களும் காரணம் ஆகும். இன்றைய கூட்டுறவு ஆண்டில் அவர்களை பாராட்டிகௌரவிப்பது சாலச்சிறந்ததே. ஆகவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு எனது வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர்
செ. பாலச்சந்திரன்

## அர்த்தமுள்ள தினம்

பார்த்த இடமெல்லாம் ஏழுவர்ணக் கூட்டுறவுக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்து கூட்டுறவுத் தினத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் சகலவற்றையும் இழந்து வந்து மெல்ல மெல்ல தனது நிலையை ஸ்திரப்படுத்தி இன்று இத்தினத்தை விமரிசையாகவும், அர்த்தமுள்ளதாகவும் கொண்டாடுவதையிட்டு பெருமையடைகின்றோம்.

தற்போதைய நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட்டுறவுச் சங்கங்களுமே சாதாரண மக்களின் சீவாதாரப் பிரச்சினைக்கு முகங்கொடுத்து , நேசக்கரம் நீட்டி நிற்கின்றன. இந்த வகையிலே வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிகள் மகத்தானவை.

இத்தினத்தில் முன்னைய கூட்டுறவாளர்களையும் கால்நூற்றாண்டுக்கு மேல் சேவையாற்றிய பணியாளர்களையும் கௌரவிப்பதும் பணியாளருக்கு 'போனஸ்' வழங்குவதும், பாடசாலை மாணவர்களின் கலைத்திறனை வளர்க்க போட்டிகளை நடாத்தி பெறுமதியான

தொடரவும், இவ்விழா இனிதே நிறைவுறவும் எனது இனிய நல்வாழ்த்துக்கள்,

திருமதி ப. திலகநாயகம்
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம், பிரதேசச் செயலர்,
வேலணை.

★ ★ ★

## ஆசிச் செய்தி

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 72-வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை மிக எழுச்சியோடு கொண்டாடுவதையிட்டு எமது வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூ'-டுறவுப்பணி மிகவும் புனிதமானது இன்றைய போர்க்கால சூழ் நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றிய பணி மிகவும் மகத்தானது.

அதனால் தான் இன்று காலத்தின் தேவையறிந்து கூட்டுறவாளர்களையும், நீண்டகாலம் பணிபுரிந்த பணியாளர்களையும் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கௌரவித்து பாராட்டுகின்றது.

தீவகத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் பல நெருக்கடிகளை எதிர் நோக்கிய போதும், வேலணை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத் தலைவர், நெறியாளர்சபை உறுப்பினர்கள், பொது முகாமையாளர், பணியாளர்கள் ஆற்றிய அளப்பரிய சேவையினால் இன்று சங்கம் தலை நிமிர்ந்து நின்று இன்று 72-வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை கொண்டாடுகிறது. இது கூட்டுறவாளர்கள் நாமெல்லாம் ஒன்று சேர்ந்து பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்விழா சிறப்பாக அமைய தீவகக் கோட்ட ஒன்றியத்திற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக, எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. ப. கனகலிங்கம்
தலைவர்,
தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியம்.

மாதம் தீவு மக்கள் குறிப்பாக வேலணை மக்கள் இராணுவ நடவடிக்கையில் இடம் பெயர்ந்து யாழ் நகரப் பகுதிகளில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இடம்பெயர்ந்து இன்னலுற்ற மக்களுக்கு தன்னலமற்ற சேவையைச் செய்து வருகின்றது. இதில் பங்கு கொள்ளும் யாவரும் பாராட்டுக்குரியவர்கள். மேலும் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணி தொடர இறைவனை வேண்டுகின்றேன்.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி,
யாழ் பல்கலைக் கழகம்.

★ ★ ★

## ஆசிச் செய்தி

சர்வதேச கூட்டுறவாளர் தினம் ஆண்டுதோறும் உலகெங்கணுமுள்ள கூட்டுறவாளர்களினால் கொண்டாடப்படும் எழுச்சிமிகு தினமாகும். வேலணை ப. நோ. கூ. சங்கமும் இவ்விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இடம்பெயர்ந்த நிலையிலும், இந்நெருக்கடியான காலகட்டத்தில் தனது உறுப்பினர்களின் தேவையை அறிந்து சேவையாற்றுவதோடு, ஏனைய மக்களுக்குச் சேவையாற்றுவதும். இப்புனிதநாளில் பெருமைமிக்க கூட்டுறவாளர்களையும், மூப்புமிக்க பணியாளர்களையும் கௌரவிப்பது கண்டு பாராட்டுவதோடு, உயரிய கூட்டுறவு கொள்கைகளின் வழிச்சென்று மென்மேலும் சிறப்படைய வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

க. மகாலிங்கம்,
உதவித்திட்டப் பணிப்பாளர்,
மா. பு. பு. இணைப்புக்குழு.

சுயமுயற்சியால் தேடிய தேட்டத்தால் வங்களாவடிச் சந்தியில் இச் சங்கம் நிறுவிக்கொண்ட தன்னிகரற்ற தலைமைப்பீடக் கட்டடம் இச் சங்கத்தின் செயல்திட்டங்களில் முக்கியமானதாகும். பல்வேறு சமூகங்களைக் கொண்ட முயற்சியாளர்களை அங்கத்தவர்களாக கொண்டுள்ள இச் சங்கம் அந்தந்த சமூகங்களைக் கொண்டவர்களுக்கான தொழிற்பாட்டு தேவைக்கான உபகரணங்களும், நுகர்பொருட்களும் காலத்தில் மட்டுப்படுத்தாத சேவையைக் கொண்ட விசேட மாதிரி விற்பனை நிலையங்கள் மூலம் வழங்கல்களை மேற்கொண்டு அங்கத்தவர்களதும், சங்கத்தினதும் பொருளாதார நிலையை வலுப்படுத்தக் கூடிய சேவையில் மகிமை பெற்றது ஒரு காலம்.

சொந்தப் பிரதேசங்களிலிருந்து தவிர்க்க முடியாத நிலையில் இடம்பெயர்ந்து இக்கட்டான நிலைப்பாட்டில்கூடவிசேட கிளைகள் மூலம் சிறந்த தரம், சிறந்த விலையில் நுகர்ச்சி விற்பனை செய்து நன்மதிப்பு பெற்றுள்ளது. தற்போதைய காலம் இடம்பெயர்ந்த பின்பு சேவையில் பணிப்பாளரதும், பணியாளர்களினதும் மதிநுட்பத்திற்குள்ளான துரித நடவடிக்கையின் காரணமாக தற்போதும் இச் சங்கம் தனது தொழிற்படு மூலதனத்தை 34 இலட்சமாக திரட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இச் சங்கம் அங்கத்தவர்களது குடும்பங்களின் பொருளாதாரம், கல்வி, கலாசாரம் ஆகியவற்றில் மேம்பாட்டிற்கான செய்திட்டங்களை உருவாக்கி மேலும் சிறப்பாகச் செயற்பட சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா நன்னாளில் வாழ்த்துகின்றேன்.

திரு. க. பஞ்சலிங்கம்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஆணையாளர் ய ழ்ப்பாணம்.

பேராசிரியர்
செ. பாலச்சந்திரன்
தலைவர், புவியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

★ ★ ★

## பணிவளர நல்லாசி

கூட்டுறவு என்பது ஒரு புனிதமான பணி. இது ஒரு சமூகப்பணி இப்பணியை பல்வேறு இடர்கள் மத்தியிலும் இடம்பெயர்ந்து வந்துள்ள நிலையிலும் கூட வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது மக்களிற்கு ஆற்ற வேண்டிய சேவைகளை தன்னாலானவரை சிறப்பாக ஆற்றிவருவதை யாவரும் அறிவர்.

இச் சங்கம் 72-வது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவை முன்னிட்டு சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்த, உழைக்கின்ற கூட்டுறவாளர்களையும், கூட்டுறவுப் பணியாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு எம் அனைவரையும் பெருமிதம் அடையச் செய்கின்றது. இச் சங்கத்தின் வளர்ச்சிக்காக பாடுபடும் சங்க தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள் அனைவரதும் முயற்சிகள் பாராட்டிற்குரியன

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இத்தகைய முன்மாதிரிப்பணிகள்மென் மேலும் வளரவும். விழா சிறப்புறவும் எனது நல்லாசியை தெரிவித்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. வை. செந்தில்நாதன்
தலைவர். யாழ்ப்பாணமாவட்டக்
கூட்டுறவுச் சபை

கலைத்திறனை வளர்க்க போட்டிகளை நடாத்தி பெறுமதியான பரில்சில்களை வழங்கி ஊக்குவிப்பதும் பாராட்டற்குரியவை.

இத்தனை பெருமைக்கும் பணிப்பாளர்களின் கூட்டுறவு மனப்பாங்கும், பொதுமுகாமையாளரின் சிறந்த முகாமைத்துவமும், பணியாளர்களின் மேலான உழைப்புமே காரணம் என்றால் அது மிகையாகாது.

''வளர்க அவர்கள் பணி''

திரு. க. சிவலோகநாதன்
ஆளணி உப சபை உறுப்பினர்,
வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்
சங்கம்.

★ ★ ★

## வாழ்த்துரை

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 72-வது சர்வதேச கூட்டுறவு தினத்தை கொண்டாடுவதையிட்டு பணியாளர் தொழிற்சங்கம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது. இடம் பெயர்ந்த நிலையிலும் தனது சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பைச் சிறப்புற ஆற்றி வருவதுடன், வேலணை ப.நோ.கூ சங்கம் தனது பணியாளர்களது சட்டபூர்வமான சம்பளக் கொடுப்பனவுகள் இலாபப் பங்கீடுகள், அபாயப்படிகள் அதுமட்டுமல்லாமல் 1994பங்குனி தொடக்கம் 30% சம்பளஅதிகரிப்புஆகியவற்றை வழங்கி பணியாளர்களின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துவதற்கு தனதுமுழுமையான பங்களிப்பைச் செய்து வருகின்றது. இவ்வகையில் வேலணை ப.நோ.கூ சங்கம்மேலும் ஆல் போல் தழைத்துச் செழிப்புற வாழ்த்துகின்றேன்.

''நன்றி''

கை. பாலசுப்பிரமணியம்
தலைவர், கூட்டுறவுப் பணியாளர்
தொழிற்சங்கம், வேலணை பல
நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.


**வேலணை ப. நோ. கூ. சங்கத்தின்**

72-வது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா சிறக்க வாழ்த்துகிறார்கள்

| புங்குடுதீவு-நயினாதீவு | காரைநகர் | ஊர்காவற்றுறை |
|---|---|---|
| ப. நோ. கூ. சங்கம் | ப. நோ. கூ. சங்கம் | ப. நோ. கூ. சங்கம் |


## கௌரவிக்கப்படும் பழம் பெரும் கூட்டுறவாளர்கள்

1. பண்டிதர்
   திரு. அ. பொன்னுத்துரை
2. திரு. சி. இராசரத்தினம் ஜே.பி.
3. திரு. க. அமிர்தலிங்கம்
4. திரு. செ. இராசையா
5. திரு. கி. பீற்றர்
6. திரு. பொ. நடராசா
7. திருமதி தி. பத்மாவதி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்


# முதலாவது பிறந்த தின வாழ்த்து

## செல்வன் லியோ அன்ரனி துஷாந்தன்

மாதகல் கனால் வீதியைச் சேர்ந்த அமரர் அன்ரன் (முன்னாள பொலிஸ் சாஜன்) அவர்களது புதல்வனான லியோ அன்ரேசன் (காவல் துறை) றகுணா தம்பதிகளின் செல்வப் புதல்வன் லியோ அன்ரனி துஷாந்தன் தனது முதலாவது பிறந்த தினத்தை 7-8-94 இன்று யாழ்ப்பாணம் 372, பாங்ஷல் வீதியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை 141/1, பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பா லியோ அன்ரேசன், அப்பம்மா அன்ரன் அரியமலர், சித்தப்பாமார், லியோ பிறின்ஸ், லியோ குயின்ரன், அம்மா, அம்மப்பா, அம்மம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, மாமன்மார், அன்ரி, அங்கிள் ஆகியோர் பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
அப்பப்பா
ம. எற்வேட் இராசரட்டினம்

(சி-10057)



# வேலணை ப. நோ. கூ சங்கம்

## எங்கள் சங்கம் பற்றி...

இ. நிவாரணப் பொருள்களல்லாத, பொருள்களை வர்த்தக ரீதியில் கொழும்பிலிருந்து கொண்டுவந்து தனது சங்கத்தின் மக்கள் கடைகள மூலமும் (இரண்டு மக்கள் கடைகள் தற்போது உள்ளன) ஏனைய சகோதரச் சங்கங்கட்கு வழங்கியதன் மூலமும், வழங்கி வருவதன் மூலமும் சந்தையில் ஓர் நிறை போட்டியை ஏற்படுத்தியதன் மூலம் மக்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் பொருள்களை மலிவாக வாங்கக்கூடிய சூழலை ஏற்படுத்தியமை எமது சங்கத்திற்கும் மக்களுக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

ஈ. எமது சங்கத்தின் கிராமிய வங்கியைப் புனரமைப்புச் செய்து சீர் செய்து யாழ்ப்பாணத்தில் திறந்து அதன் சேவையை எமது சங்க அங்கத்தவர்கட்குக் கிடைக்கச் செய்தமையால் எமது அங்கத்தவர்கள் சுயதொழில் வாய்ப்புக் கடன்களைப் பெற ஏற்ற ஒழுங்குகள் சங்கத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

உ. எமது மக்களில் கணிசமானோர் அகதிமுகாம்களில் வசதியற்ற நிலையில் வாழ்கின்றார்கள் அவர்கட்கான எமதுபங்களிப்பைச் செய்ய வேண்டி இருந்தது. இயன்ற வரை எமது சங்க நிதி வளத்திற்கேற்ப எமது பங்களிப்பை நல்கி இருக்கின்றோம்.

ஊ. எமது சங்க எல்லைப் பரப்பிலுள்ள பாடசாலைகள் மிகவும் கஷ்டமான சூழ் நிலையில் தற்காலிகக்கொட்டகைகளில் இயங்கி வருகின்றன. அவற்றிற்கான எமது பங்களிப்பைச் சங்கம் தனது இயல்புக் கேற்பச் செய்துள்ளது- செய்து வருகின்றது.

ஏ. போராட்டச் சூழ்நிலையில் மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் முக்கியமாக இரண்டாம் ஈழப்போரின் பின்பு தமிழீழத்தில் அரசசார் பற்ற நிறுவனங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அந்த வகையில் எமது வேலணை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கமும் தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட்டுள்ளதுடன் போராட்டத்துக்கான தனது தார்மீகப் பங்களிப்பையும்செய்துள்ளது - செய்து வருகின்றது.

கூட்டுறவு சத்தியம் சார்ந்த ஓர் தர்மம். இன்றைய காலகட்டத்தின் மிக அத்தியாவசியதேவையுள் அதுவும் ஒன்றாகும். அந்தக் கூட்டுறவு என்ற தர்மத்தை சூது கவ்வலாம். ஆனால் தர்மமே மறுபடியும் வெல்லும். சத்தியத்திற்கு சோதனை வரும். ஆனால் சத்தியமே ஜெயிக்கும் என்பதை இத்துறையில் நம் கண்முன்னே நம் காலத்தில் கண்டோம், காண்போம். மகாகவி பாரதி அன்று வாழ்த்தியதற்கொப்ப ''குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு மேன்மையுற குடிமை நீதி தழைக்கும்'' ஒரு நெறியாக புதிய இளம் தலைமையில் கூட்டுறவு புதிய பரிமாணம் பெற்று வருகின்றது, வர வேண்டும். இதற்கு இனி தோல்விஇல்லை. ஏனெனில் அது சத்தியத்தைச் சார்ந்து நிற்கின்றது.

''வலிவு படைத்தவனே வாழ்வுக்குரியுவன்'' என்பது கீதையின் கோட்பாடு. ஆகவே வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், பொருளாதாரத்தில் ,சேவையில், செயற்பாடுகளில் , சிந்தனைகளில், வலிவுபடைத்ததாக மாறி தனது சங்க மட்டத்தில் சமூக பொருளாதார கல்வி, கலாசார அபிவிருத்தியில் கிராம முன்னேற்றத்தில் தன் பங்களிப்பை மென்மேலும் விருத்தியுறச் செய்ய ஆத்ம பலத்தை இறைவன் சங்கத்திற்கு அளிப்பான் என வேண்டுவதுடன் 72-வது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு கட்டத்திலும் அடிக்கற்களாகவும் ஏணிப்படிகளாகவும் விளங்கிய கூட்டுறவுப் பெரியோர்களான திரு. சி. இராசரத்தினம், திரு அ. பொன்னுத்துரை, திரு. க. அமிர்தலிங்கம், திரு செ, இராசையா, திரு. கி. பீற்றர் திரு. பொ. நடராசா திருமதி தி. பத்மாவதி ஆகியோரை வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

(சி-10050)






(சி-10063)


# தேர்தலின் பின்னர் சமாதானக் குழு செயற்படும்

### -சு. க. பொதுச் செயலர்

(கொழும்பு)

சகல தேர்தல் தொகுதிகளிலும் தற்போது அமைக்கப்பட்டுள்ள கட்சி அமைப்பாளர் குழுக்கள் தேர்தலின் பின்னர் சமாதானக் குழுக்களாக அமையும் என சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் செய்தியாளர்களிடம் இது பற்றி மேலும் கூறுகையில் தற்போது இதற்கான முழுமையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு இருப்பதாகவும், இந்த நிலையில் இருந்து தமது கட்சி ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

# தமிழ்-முஸ்லிம் செல்வாக்கு ஆட்சியில் அதிகரிக்கிறது

### தினேஷ் குணவர்த்தனா கவலை

(கொழும்பு)

நாடு பிரிக்கப்படாது பாதுகாக்க வேண்டியது எனது கடமை மட்டுமல்ல, எனது கட்சியின் கடமை மட்டுமல்ல, இது நாடு முழுவதும் வாழும் சிங்கள மக்களின் கடமையாகும் இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

ரூபவாஹினி தொலைக்காட்சி மூலம் நிகழ்த்திய தேர்தல் பிரசார உரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் நாட்டில் தொடர்ந்து சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் செல்வாக்கு அதிகரித்துச் செல்வதாகவும் சிங்கள மக்கள் செல்லாக்காசுகளாகி வருவதாகவும் தெரிவித்தார். அத்துடன் இந்த நிலைமை தொடர்ந்து எதிர்காலத்திலும் நிலைப்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

வட்ட செயலகத்தில்

# மிதிவண்டிகள் வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இம்முறை கொழும்பில் இருந்து தமது அங்கத்தவர்களிற்கு விநியோகிப்பதற்காக 100 துவிச்சக்கர வண்டிகளை தருவித்துள்ளது. இதைத்தொடர்ந்து மேற்படி சங்கம் துவிச்சக்கரவண்டி தேவையான தமது அங்கத்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. (88)

# சர்வோதயாவினால் வீடமைப்பு

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிரந்தர வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நாவாந்துறையில் 25 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிரந்தர வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 76 ஆயிரம் ரூபா செலவில், 25 வீடுகள் அமைத்து வரப்படுகிறது. இந்த வீடுகள் ஒவ்வொன்றும் நாவாந்துறை மண்பிட்டி கிராமத்தை சேர்ந்த 25 வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (41)

# புலிகளுடன் உறவுடையோர் சிறிலங்காவின் துரோகிகள்

### டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

வடக்கு கிழக்கு பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. விடுதலைப் புலிகளுடன் உறவு கொண்ட துரோகிகள் நாட்டை துண்டாட ஒத்தாசை வழங்குகின்றனர். இவர்களுக்கு மக்கள் நல்லபாடம் புகட்ட வேண்டும் இவ்வாறு ஜனாதிபதி விஜேதுங்கா பலாங்கொடையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்,

# தமிழில் தோற்றியவருக்கு சிங்களத்தில் பதவி உயர்வு

(பருத்தித்துறை)

பொது நிர்வாக அமைச்சு எழுதுவினைஞர் தரம் I ற்குப் பதவி உயர்வுக்கு நடாத்திய பரீட்சைக்குத் தமிழ் மொழி மூலம் தோற்றிய தமிழரொருவருக்கு அவர் சிங்கள மொழி மூலம் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலக நிர்வாக அதிகாரி திரு. க. சந்திரயோகனுக்கே இந்நிலை ஏற்பட்டுளளது. இப்பரீட்சைப் பெறுபேறு வெளியானதும் திரு. சந்திரயோகன் வெகு ஆவலுடன் பெறுபேறுகளைப் பார்வையிட்டார். அதில் தனது பெயர் இல்லாமையால் ஏமாற்றமடைந்திருந்தார். பின்னர்தான் இவரது பெயர் சிங்கள மொழி மூலமான பதவி உயர்வுப் பெறுபேற்றுப் பட்டியலில் இருப்பது தெரிய வந்துள்ளது. திரு. சந்திரயோகன் தனக்கு நேர்ந்த இக்கதி பற்றி பொது நிர்வாக அமைச்சிற்கு முறையீடு செய்துள்ளார். (25)

# சுற்றுக்கிண்ணம் அன்பளிப்பு

(வடமராட்சி)

அமரர் சபாபதிப்பிள்ளை அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக ஒன்பது கல்வி நிலையங்களுக்கு அவரது குடும்பத்தினரால் ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (யோ)

ஏமாற்றமடைந்திருந்தார்.

(யோ)

# பதவி வெற்றிடங்கள்

புனர்வாழ்வு மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமாகிய எமது நிதிப்பிரிவின் செயற்பாட்டை விஸ்தரிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **உதவிக் கணக்காளர்** - கிளிநொச்சி மாவட்டம்
2. **கணக்குப் பதிவாளர்** - யாழ். மாவட்டம்
3. **உள்ளகக் கணக்காய்வு உதவியாளர்கள்** - பதவிகள் 2 - யாழ். மாவட்டம் (ஆண்கள் மட்டும்)
4. **தட்டெழுத்தாளர்** - தமிழ் / ஆங்கிலம் - யாழ். மாவட்டம் (பெண்கள்)
5. **முகாமையாளர்** - கிராமிய விற்பனை நிலையம் - நாகர்கோவில்
6. **தையல் பயிற்சி ஆசிரியை** - பண்டிகர் குடியிருப்பு - கெற்பேலி

**தகைமைகள்:**

பதவி 1: அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் பரீட்சையில் இடைநிலைத் தராதரம் அல்லது கணக்கியல் சம்பந்தமாக குறைந்தது 05 வருட அனுபவம்.

பதவி2, 3: க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் பாடத்தில் சித்தி. கணக்குப்பதிவு சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட தராதரப் பத்திரம் மற்றும் குறிப்பிட்ட பதவிகள் சார்ந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதவி 4: தட்டெழுத்துவேகம்- குறைந்தது தமிழ்20 சொற்கள் / நிமி ஆங்கிலம் 30 சொற்கள் / நிமி.

பதவி 5: க. பொ. த. (சாதாரணம்) அத்துடன் விற்பனை நிலையம் சம்பந்தமாக குறைந்தது 02 வருட அனுபவம்.

பதவி 6: தையல் பயிற்சி சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்தவராக இருத்தல் வேண்டும். பயிற்சிநெறி சம்பந்தமான முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

வயது: **20 - 45 வருடங்கள் வரை**

விண்ணப்பமுடிவு திகதி: **15 - 08 - 1994**

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**கணக்காளர்,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**
**நடுவப்பணியகம்,**
83/2, காங்கேசன்துறை சாலை,
கொக்குவில்.

(9039)

## வட்ட செயலகத்தில் பதிவுசெய்யவும்

இவ் ஆண்டுக்கானதடகளப் போட்டி வலயமட்டத்தில் நடைபெற இருப்பதால் சண்டிலிப்பாய் வட்டவைக்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சண்டிலிப்பாய் வட்டவை செயலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## எறிகணை வீச்சினால் பலத்த சேதம்

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதிகள் மீது பலாலி இராணுவ முகாமிலிருந்து கடந்த இரண்டு தினங்களாக அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட பயங்கர ஆட்லறி ஷெல் தாக்குதலையடுத்து இப்பகுதியில் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன.

பரவலாக வடமராட்சியில் பல இலட்சக்கணக்கிலான சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக சாதாரண கணிப்பீடு ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.

இரண்டு தினங்களில் மட்டும் பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்களுக்கு சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட வீடுகள் நூற்றுக்கு மேற்பட்ட கால்நடைகள், தோட்டங்களில் உபஉணவுகள், சிறு தானிய வகைகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன.

மேற்குறித்த இரண்டு தினங்களில் மட்டும் வடமராட்சியில் இரவு நேரங்களில் சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் விழுந்து வெடித்தமை குறிப்பிடத்தக்கது. இராணுவத்தினரின் இத்தாக்குதலுக்கு வயோதிபர்கள், சிறுவர்களுமே காயமடைந்துள்ளனர். மற்றும் வீட்டில் உள்ள சமையல் பாத்திரங்கள், தளபாடங்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளன.

(யோ)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

[8-08-94]



தோற்றம்:
1975-03-19

வீரச்சாவு:
1994 07-09

## 2-ம் லெப்.இலக்கியன்/றொசான்
## (சந்தியாப்பிள்ளை - புவிராஜ், அருண்)

ஊருக்குள் அழகன் என்றே உள்ளம் பூரித்தோம்-எம்
குடும்பப்பேருக்கு முதல்வன் எனப்பெருமைப்பட்
டோம்-பின்
நாட்டுக்கும் ஒருவனாய் நீ அண்ணன் வழி
நடப்பதைக் கண்டு மனம் நிறைவு கொண்டோம்.

கேட்டுக்கே உருவாம் எம் எதிரிகளின் பாசறைக்குள்
உளவறியச் சென்று நீயும் பலியானாய் என்றசேதி
கேட்டு நாமும் பதறினோம், பரிதவித்தோம் எங்கள்
செல்வா!

தமிழுக்காய் உன் உயிரைத்தந்து நீயும் தரணியிலே
என்றென்றும் வாழ்கின்றாயே!

1994-08-08 நாளைகாலை 6.30 மணிக்கு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இரங்கல் திருப்பலி குழந்தையேசு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இ. சந்தியாப்பிள்ளை,
(இராசலிங்கம்)
பொலிகண்டி மேற்கு. (9035)

தகவல்
- குடும்பத்தினர்

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி இராசமணி சின்னத்துரை
## (சிங்கப்பூர் இராசம்மா)

மலர்வு:
13 - 04 - 1918

உதிர்வு:
09 - 07 - 1994

ஓய்வின்றி ஒழிவின்றி ஒரு கணம் துயில் இன்றி
உறவுகள் மேம்படவும் உளமார உழைத்தாய்!
சேய்களும் சேர்ந்தோரும் சீர் பெற வேண்டியே
செயல் வடிவங்கள் பல நீ கொடுத்தாய்!
வாய் மொழி வார்த்தையில் வரவேற்புரை ஆற்றியே
வாழ் நாளெலாம் பிறர் துயர் களைந்தாய்!
தாய்மையே, தெய்வமே தூண்டா-மாடத்தின் விளக்கே
- எங்கள்
தாயவளே, தவமே எமை தவிக்க வைத்தும் ஏனோ
- மறைந்தாய்!

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (8-8-94) இல் அன்னாரின் அந்தியேட்டியிலும் வீட்டுக் கிருத்தியத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பொன்னுச்சாமி சண்முகாதேவி'
'' சிவகுருவாசம் ''
அம்மன் கோயிலடி,
வல்வெட்டித்துறை. (9020)

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சிந்தனைக்கு..

தான் வெளிச்சத்தில் இருப்பதாகக் கூறித்
தன் உடன்பிறப்பை வெறுப்பவன்
இருளிலேயே இருப்பவன் ஆவான்
- இயேசுநாதர் (விவிலியம்)


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 07-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05


## மாறிவரும் அரசியல் பாரம்பரியங்கள்

கடந்த 17 வருட ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரசியல் யாப்பை மட்டுமல்ல ஜனநாயகமுறை ஆட்சியின் பண்புகளையும் பெரிதும் மாற்றி விட்டது. ஆகையினால் அரசியற் பாரம்பரியங்களுக்கு மாறான சம்பவங்களும் பெருமளவில் இடம் பெறத் தொடங்கியுள்ளமை ஆச்சரியப்படக் கூடிய தொன்றாக இல்லை.

இந்த வகையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா விடுத்துள்ள கோரிக்கையும் உள்ளது. நேற்று முன்தினம் சகல கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டிய ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறினும், அமைதிபேண உதவுமாறும், அல்லாது போனால் அது நாட்டின் இறைமையைப் பாதிக்கும் என எச்சரிக்கை/கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தற்பொழுது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருப்பினும், அவர் கடந்த காலத்தில் இராணுவத்தளபதியாகவும், பின்னர் முப்படைகளின் நடவடிக்கைத் தலைமை தளகர்த்தாகவும் இருந்துள்ளதோடு தற்பொழுது வடக்கு-கிழக்கில் நடைபெறும் போரிற்கென உருவாக்கப்பட்ட 'பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவில்' முக்கியமான உறுப்பினரும் ஆவார்.

இந் நிலையில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா விடுத்த கோரிக்கையானது ஒரு அரசாங்கத்தரப்பு கோரிக்கை எனக் கொள்ள முடியாது. இது ஒரு ஆயுதப்படைத் தரப்புக் கோரிக்கை என்றே கொள்ள வேண்டும். அரசாங்கத்தரப்பு கோரிக்கை என்றால் அதை விடுவதற்கு ஜனாதிபதியோ அன்றி ஜனாதிபதிச் செயலகமோ உள்ளது என்பதே பொருத்தமானதாகும்.

இந்நிலையிலேயே சிறிலங்காவின் ஜனநாயகம் எங்கே போகின்றது என்ற கேள்வி எழும்புகின்றது. ஏனெனில், இதுவரையில் பல தேர்தல்கள் சிறிலங்காவில் நடந்து முடிந்துள்ளன. வன்முறைகளும் - தற்பொழுது இருப்பது போல் இல்லாது விடினும் - இடம்

## விவசாயிகளின் துப்பாக்கிகளை மீளப்பெற பொலிஸ் முயற்சி

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பாதுகாப்பு காரணங்களுக்காக வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் மீளப் பெறுவதில் பொலிசார் தீவிரமாகியுள்ளனர்.

தேர்தல் தொடர்பாக பதற்ற நிலை ஏற்பட்டு வருவதாலும், இப் பதற்ற நிலையின் காரணமாக விவசாயிகளின் துப்பாக்கிகள் பயன்படுத்தப்படும் சாத்தியக்கூறு அதிகரித்து இருப்பதாலும் இம்முடிவு எடுக்கப்பட்டு இருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் மட்டும் விவசாயிகள் தம் பயிர்களைப் பாதுகாப்பது என்ற அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான துப்பாக்கிகள் பொலிசாரால் விநியோகிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இத் துப்பாக்கிகள் ஆகஸ்ட் 16-ல் வாக்குப் பதிவு முடிவுறுவதைத் தொடர்ந்து மீள அளிக்கப்படும் எனவும் அப் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## வன்செயல்களை தூண்ட வேண்டாம் அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள்

-தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

வன்செயல்களுக்கு தூபம் போட வேண்டாம், அவற்றைத் தூண்ட வேண்டாம், அவற்றில் ஈடுபட வேண்டாம் இவ்வாறு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா கோரிக்கை விடுத்துள்ளார். அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் தொண்டர்களுக்கு அவர் பிரத்தியேகமாக இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதேவேளை ஆர்மாறாட்டம்- செய்வோர்தேர்தல் சட்டங்களை மீறுவோர், என்போர் கைது செய்யப்படுவார்கள் என்றும் அத்தகையோருக்கு பிணை வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டம், ஒழுங்கு என்பவற்றைப் பேண அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும், வேட்பாளர்கள் தத்தமது ஆதரவாளர்கள் சகிதம் வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்கெடுப்புதினத்தன்று செல்ல வேண்டாமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பதவி அந்தஸ்திற்காக நாம் ஐ. தே. கவுடன் சேரவில்லை

- தொண்டமான்

(கொழும்பு)

நாம் பதவியையும், அந்தஸ்தையும் நாடி ஒரு போதும் ஐ.தே.க பட்டியலில் சேர்ந்து வாக்கு கேட்கவில்லை, என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான தொண்டமான் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், நாம் மலையக மக்களின் தனித்துவத்தையும் உரிமையையும் பாதுகாக்கும் வகையிலேயே இம் முறை ஐ.தே.க உடன் கூட்டுச் சேர்ந்து உங்களிடம் வாக்கு கேட்கிறோம். எமது கோரிக்கையை ஏற்று எம்மை ஆதரிக்க முன்வந்த காமினி திசாநாயக்காவை இத்தேர்தலில் ஆதரிப்போம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## வன்னி தேர்தலிலிருந்து ந. ச, ச. கட்சி விலகியது

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெறுவது ஓர் போலியான தேர்தல் என்றும் எனவே தனது கட்சி வன்னிமாவட்டத்தில்போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொள்ளப் போவதாகவும் நவசமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்-

நேற்று இரவு சிறிலங்கா ரூபவாகினியில் அவர் நிகழ்த்திய தேர்தல் பிரசாரஉரையின் போது இக்கருத்தை தெரிவித்துள்ளார். தொடர்

யாக விலக்கிக் கொள்வதாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலின் பெயரினால் நடைபெறும் ஊழல்களுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்க தயாராயில்லை என்றும் இதனாலேயேதமதுகட்சிஇம் முடிவுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பு மாத்தறை மாவட்டத்தில் தமது கட்சியின் சின்னத்திற்கு வாக்களிக்குமாறும் ஏனைய மாவட்டங்களில் பொது ஜன ஐக்கிய முன்ன

## தென்மராட்சியில் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு விசர் நோய்த்தடுப்பூசி மருந்து கிடைத்துள்ளது. இதைத் தொடர்ந்து மேற்படி பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களிற்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றும் வேலை

## கல்வித்திணைக்கள பலகை கறையானுக்கு இரை

யாழ். கல்வித்திணைக்களத்தில் பலகைகள் கறையானுக்கு உணவாகிக் கொண்டு இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

கல்வித்திணைக்கள வலயம் ஒன்றில் கணக்கு கிளைக்கும் சிற்றுண்டிச் சாலைக்கும் பின்னால் அமைந்துள்ள இடத்தில் இப் பலகைகள் பல மாத காலமாக கவனிப்பார் எவரும் இன்றி இருப்பதையும், இதனால் கறையான் பல பலகைகளை இதுவரை அரித்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

பாடசாலைகளுக்கு எடுத்து வரப்பட்ட பொருட்கள் அடங்கிய பெட்டிகளின் பலகைக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இன்று யாழ் குடாநாட்டில் பலகைக்கு ஏற்பட்ட தட்டுப்பாடானநிலையில் இவ்வாறான நிலை மிகவும் மனவருத்தத்திற்கு உரியது என பலரும் கவலை தெரிவிக்கின்றனர். (88)

## அரசியல் தேக்கம் போக்க முயற்சி எடுக்கப்படுகிறது

- சந்துலால் சந்திராகர்

(டில்லி)

பங்குப் பத்திர பேர ஊழல் தொடர்பாக நடைபெற்ற கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதமையினால் எழுந்துள்ள அரசியல் தேக்க நிலையை போக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் சந்துலால் சந்திராகர் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இதுபற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், கூட்டுப்பாராளுமன்றக் குழுவினர் மக்களவை சபாநாயகர் சிவராஜ் பாட்டீலை சந்தித்து பேச்சு நடத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

பங்குப்பத்திர ஊழல் தொடர்பான பாராளுமன்றக்குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படாததைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தின் குளிர்காலக்கூட்டத் தொடரை புறக்கணித்து வருவது தெரிந்ததே.

## பம்பாய் குண்டு வெடிப்பில் பாக். நேரடித் தொடர்பு

இந்தியா அறிவிப்பு

(டில்லி)

பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு என்று அறிவிக்கப்படுவதற்கு மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி சவான் தெரிவித்துள்ளார்

பம்பாய் குண்டுவெடிப்புடன் பாகிஸ்தான் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளமையால் பாகிஸ்தான் ஒரு பயங்கர நாடு என அறிவிப்பதற்கு மத்திய அரசு முயற்சிக்கும் என நேற்றுமுன்தினம் மாநிலங்களவையில் வைத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

பங்கு பத்திர ஊழ்ல் தொடர்பாக

## பாராளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும்

- டாக்டர் மன்மோகன்சிங்

(டில்லி)

பங்கு பத்திர ஊழல் தொடர்பான விசாரணைகளை நடத்திய கூட்டுப்பாராளுமன்றக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆறுவிடயங்களை அரசாங்கம் ஏன் ஏற்கவில்லை என்பதற்கான காரணங்களுக்காக இவ் அறிக்கையை ஒரேயடியாக ஒதுக்குவதற்கு பதிலாக எதிர்க் கட்சிகள் இதில் இருக்கும் குறைபாடுகளை சுட்டிக் காட்ட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அதை விடுவதற்கு ஜனாதிபதியோ அன்றி ஜனாதிபதிச் செயலகமோ உள்ளது என்பதே பொருத்தமானதாகும்.

இந்நிலையிலேயே சிறிலங்காவின் ஜனநாயகம் எங்கே போகின்றது என்ற கேள்வி எழுப்புகின்றது. ஏனெனில், இதுவரையில் பல தேர்தல்கள் சிறிலங்காவில் நடந்து முடிந்துள்ளன. வன்முறைகளும் - தற்பொழுது இருப்பது போல் இல்லாது விடினும் - இடம் பெற்றதுண்டு. இத் தேர்தல்களின் போது அரசாங்கமே தேர்தலில் அமைதிகாக்குமாறு பொது மக்களிடமும், கட்சிகளிடமும் கோரிக்கை விடுவதுண்டு. இதேசமயம், தேர்தலின் முன்னும், பின்னும் அமைதியை நிலைநாட்டுமாறு ஆயுதப்படைகளுக்கு உத்தரவு இடுவதுண்டு. இதேசமயம் எதிர்த்தரப்பினரும். மக்களிடம் கோரிக்கை விடுவதோடு, ஆயுதப்படையினரை நடுநிலைமையுடன் செயற்பட்டு அமைதிபேணுமாறு கோருவதுண்டு.

ஆனால், இம்முறை இந்நிலை தலைகீழாக மாற்றமடைந்துள்ளது. ஆயுதப்படையினர் தரப்பில் இருந்து அரசியற்கட்சிகளுக்கு அமைதியையும் ஒழுங்கையும் பேணுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இக் கோரிக்கை மரபை மீறிய ஒரு செயலாக இருப்பினும் இன்றைய நிலையில் கோரிக்கையில் நியாயம் இல்லாமலும் இல்லை.

ஏனெனில், தற்பொழுதே தேர்தல் வன்முறை கட்டுக்கடங்காமல் செல்வதாக பொலிஸ்மா அதிபர் எச்சரித்துள்ளார். இந்நிலை தொடருமானால், பொலிசாரால் தேர்தல் வன்முறையைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனை உறுதிப்படுத்துமாப்போல் சம்பவங்களும் இல்லாமல் இல்லை

இதுவரையில் 2000க்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, கட்சிகளின் முக்கிய பிரமுகர்களே வன்முறைகளுக்குத் தலைமை தாங்குகின்ற நிலையும் உருவாகியுள்ளது. ஐ. தே. க. அமைச்சர் தலைமையிலான குழுவினர் எதிர்க்கட்சி ஆதரவாளர் ஒருவரைத்தாக்கிக் கொன்றுள்ளனர். இதேபோன்றே ஒரு மாகாணசபை உறுப்பினரால் எதிர்த்தரப்பு கட்சி அமைப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அத்தோடு தேர்தலில் எக்கட்சி வென்றாலும் தோற்றாலும் வன்முறை அதிகரிக்கும் வாய்ப்பே உள்ளது என அரசியல் அவதானிகளும் தெரிவிக்கின்றனர்

இந்நிலையில், சிறிலங்காவின் அரசியல் பாரம்பரியங்கள் மாற்றம் அடைவது தவிர்க்க முடியாதது போன்றே உள்ளது. ஆனால் இதனை அரசியல்வாதிகள் எந்தளவிற்கு கருத்திற் கொள்வார்கள் என்று குறிப்பிடமுடியாது. ஏனெனில் இன்று அவர்கள் முன்னுள்ளது அரசியற்பாரம்பாரியங்கள் என்பதைவிட அதிகாரப் போட்டியே ஆகும். ஆனால் இதன் விளைவுகளை இன்று அரசியல்வாதிகள் சிந்திக்கத் தவறுவார்களேயானால் இறுதியில் வருத்தப்படவேண்டியும் வரலாம். இராணுவம் இடும் கட்டளைகளை இவர்கள் சிரமேற் கொள்ள வேண்டியும் ஏற்படலாம்.

---

பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு சிறிலங்கா ரூபவாகினியில் அவர் நிகழ்த்திய தேர்தல் பிரசார உரையின் போது இக்கருத்தை தெரிவித்துள்ளார் தொடர்ந்து உரையாற்றுகையில் வன்னி மாவட்ட தேர்தல் வாக்குச் சீட்டுக்களில் இருந்து தனது கட்சியை முழுமைவுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பு மாத்தறை மாவட்டத்தில் தமது கட்சியின் சின்னத்திற்கு வாக்களிக்குமாறும் ஏனைய மாவட்டங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைமையில் போட்டியிடும் இடதுசாரி உறுப்பினர்களை ஆதரிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

---

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு விசர் நோய்த்தடுப்பூசி மருந்து கிடைத்துள்ளது. இதைத் தொடர்ந்து மேற்படி பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களிற்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக் தெரிவிக்கப்படுகிறது.

(88)

---

(டில்லி)

பங்கு பத்திர ஊழல் தொடர்பான விசாரணைகளை நடத்திய கூட்டுப்பாராளுமன்றக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆறுவிடயங்களை அரசாங்கம் ஏன் ஏற்கவில்லை என்பது பற்றி பாராளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தவிடயத்தில் நடவடிக்கை அறிக்கை தான் இறுதியான முடிவு என்று கொள்ளப்படக் கூடாது எனவும், அரசியல் காரணங்களுக்காக இவ் அறிக்கையை ஒரேயடியாக ஒதுக்குவதற்கு பதிலாக எதிர்க் கட்சிகள் இதில் இருக்கும் குறைபாடுகளை சுட்டிக் காட்ட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், நாட்டின் உயரிய அமைப்பான பாராளுமன்றத்தில் இது பற்றி விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றும், நிதித்துறையில் உள்ள குறைபாடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# லெபனான் மீதான தாக்குதல் இஸ்ரேல் மன்னிப்புகோரியது

(டெல் அவிவ்)

லெபனான் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதலில் நான்கு சிறுவர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். பதினைந்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து மன்னிப்புக் கோரியுள்ள இஸ்ரேலிய இராணுவம். இது தற்செயலாக இடம் பெற்று விட்டது எனவும் கூறியுள்ளது.

எனினும் இச் சம்பவம் காரணமாக தென் லெபனான் பகுதியில் பதற்ற நிலை தோன்றியிருப்பதுடன் புதிதாக வன் செயல்கள் ஆரம்பிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. லெபனான் குடிமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படுமென்று லெபனானிய கெரில்லாத் தலைவர்கள் மீண்டும் மீண்டும் எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ் வருட ஆரம்பம் முதல் இஸ்ரேல் லெபனான் மீது நடத்திய 27-வது, 28-வது விமானத்தாக்குதல்கள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் இஸ்ரேல் பழிக்குப் பழி நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரிக்கை விடப்பட்ட பின்பு நடைபெற்ற முதலாவது தாக்குதல் இதுவாகும்.

பம்பாய் குண்டு வெடிப்பு

# முக்கிய சந்தேகநபர் மேமன் புதுடில்லியில் கைதானார்

பம்பாய் குண்டுவெடிப்பு சம்பவத்தின் சூத்திரதாரிகளில்ஒருவர் என்றுமத்திய புலனாய்வுக்கழகமான சி. பி. ஐ யினால் சந்தேகிக்கப்பட்ட யாசின் அப்துல்ரசாக் மேமன் அண்மையில் புதுடில்லியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் முதல் திகதியன்று பம்பாய் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் தமது சகோதரருக்கு பாகிஸ்தான் அரசு உதவியிருப்பதாக அவர் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்தியாவில் உறுதியற்ற சூழ்நிலையையும், பதற்றத்தையும் தோற்றுவிக்கும்முகமாக பாகிஸ்தான் அரசுடன் இணைந்து இக்குண்டுவெடிப்புக்குதமது சகோதரர்சதிசெய்ததாகவும், பாகிஸ்தானே பணம், வெடிப்பொருட்கள் உட்பட மற்றும் உதவிகளை வழங்கியதாகவும் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில்அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹஸ்ரத்பால் தர்கா

# காவல் அரண்களில் இருந்து படையினர் விலகினர்

(டில்லி)

காஷ்மீர்மாநிலத்தின் ஹஸ்ரத்பால் தர்காவை சுற்றி அமைக்கப்பட்டிருந்த காவல் அரண்கள் நேற்றுக் காலை முதல் நீக்கப்பட்டுள்ளன.

இவ் வளாகத்தினுள் இருக்கும் நபிகள் நாயகத்தின் புனித சின்னத்தைப் பாதுகாப்பது தொடர்பாக தர்காவை நிர்வகிக்கும் முஸ்லிம் ட்ரஸ்ட்டிற்கும், மாநில நிர்வாகத்திற்கும் இடையே இணக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜம்மு காஷ்மீர் அரசு காவல் நிலைகளை விலக்கிக்கொண்டுவிட்டது. எனினும் புனித சின்னத்தைப் பாதுகாப்பதற்காக ஜம்மு காஷ்மீர் மாநில ஆயுதப் பொலீசார் வளாகத்தினுள் சேவையில் ஈடுபடவுள்ளனர்.

# சேர்பிய நிலைகளின் மீது நேட்டோவிமானத்தாக்குதல்

(சரஜேவோ)

பொஸ்னிய தலைநகர் சரஜேவோ நகருக்கு சமீபமாக இருக்கும் சேர்பிய நிலைகள் மீது நேற்று நேட்டோ விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஐ. நா. படைகளின் தளஞ்சியம் ஒன்றிலிருந்து கனரக ஆயுதங்கள் பலவற்றை சேர்பியர்கள் எடுத்துச் சென்றதைத் தொடர்ந்து இவ் விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இத் தாக்குதலில் இரண்டு பிரெஞ்சு விமானங்களும், இரண்டு அமெரிக்க விமானங்களும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 08. 07**

**ஞாயிறு இரவு**

08. 01 - பலாலி தளத்தில் வீரகாவியம் படைத்த கரும் புலிகள் வெற்றி நாளையொட்டி சிறப்பு நிகழ்ச்சி

08. 30 - செய்திகள்

08. 40 - தொடர் நாடகம் இலங்கை மண் - 35-ம் அங்கம்.

**1994. 08. 08**

**திங்கள் காலை**

07. 02 - மாவீரவணக்கம்

07. 15 - மணியாரம்

07. 30 - செய்திகள்

07. 35 - பத்திரிகைச் செய்திகள்

07. 40 - தாயகப் பாடல்கள்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# 12 கொலைகள் உட்பட 2000 வன்முறைகள்

ஜூலை 15-ஆம் திகதி முதல் கடந்த சனிக்கிழமை வரை 2000 தேர்தல் வன் செயல்கள் நடைபெற்றுள்ளதாக கொழும்பில் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது இவற்றில் 12 கொலைச் சம்பவங்களும் அடங்குகின்றன. இவ் வன்முறை தொடர்பாக 60 பேர் கைதாகியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக தேடப்படும் மேலும் சிலர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வேளையில் கல்முனை மருதமுனை பகுதியில் கடந்த புதன் இரவு கட்சி அலுவலகம் ஒன்று தீக்கிரையானதை அடுத்து மாற்றுக் கட்சியுடன் நடந்த மோதலில் இருவர் கத்திக்குத்துக்கிலக்காகினர்.

# வடக்கு - கிழக்கு தேர்தல் முடிவுவருவதுதாமதமாகும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் அளித்த வாக்குகள் அவர்களின் சொந்த மாவட்டத்திற்கு தேர்தலின் மறுநாளே வந்து சேரும் என்பதால் வடக்கு - கிழக்கு தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் காலதாமதம் ஏற்படலாம் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கிலிருந்து இடப்பெயர்ந்தோர் வாக்களிக்க வசதியாக தற்காலிகமாக அவர்கள் தங்கியுள்ள பகுதிகளில் தனியான வாக்குப்பெட்டிகள் வைக்கப்படவுள்ளன.

தற்போதைய பாதுகாப்பு நிலைமை காரணமாக 17ஆம் திகதி நண்பகல் அளவிலேயே தேர்தல் அதிகாரி சொந்த மாவட்டத்திற்கு வந்து சேரமுடியும் என்பதால் முடிவுகள் வெளியிடுவது தாமதமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அடுத்தகட்டவினாத்தாள்கள் 16-க்குப் பின்பே வரும்

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் எதிர்வரும் 16-ஆம் திகதிக்குப் பின்புதான் வந்து சேரும் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

எதிர் வரும் 16-ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதினால் அதற்குப் பின்னரே இவ் வினாத்தாள்கள் இங்கு எடுத்துவரப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

முதலாம் கட்ட பரீட்சைகள் எதிர்வரும் 11-ஆம் திகதியுடனும் இரண்டாம் கட்ட பரீட்சைகள் எதிர்வரும் 22-ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் முதலாம் திகதியுடனும் முடிவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கென யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் எதிர்வரும் 12-ஆம் திகதி கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார் என மேலும் தெரியவருகின்றது. (பா)

## ஆடி அமாவாசை தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோவில் புஷ்பகரணியில் இன்று ஆடிஅமாவாசை தீர்த்தம் வழமை போல் நடைபெறும் அடியார்கள் கிரியைகளைச் செய்து புண்ணிய தீர்த்தமாட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!
பக்திரசம் சொட்டும்
நல்லை முத்துக்குமரன் மேல் பாடிய
"நல்லை

## ஆடிப்பூர திருவிழா

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் முதன் முதலாக எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடிப்பூர திருவிழா நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு சங்காபிசேகமும் அதனைத் தொடர்ந்து அம்மனுக்கு பூர்வகர்மமும் பகல் அன்னதானமும் இடம்பெறும் மாலை தமிழருவி சிவகுமாரனின் சிறப்புச் சொற்பொழிவும் கம்பன்கழகம் திரு. ஜெயராஜ் ஆதரவில் ஆணைக் குழுவும் இடம்பெறும்.

## வீரச்சாவு

வீரச்சாவடைந்த மேஜர் நெடுஞ்செழியன் / றம்போ (பாலசிங்கம் ரமணன், காட்டுப்புலம் தொண்டமனாறு, வல்வெட்டித்துறை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இம்மாவீரனின் வித்துடல் இன்று காலை 9.00 மணிக்கு அணிவகுப்பு மரியாதையுடன் இவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு காட்டுப்புலம் கடற்தொழில் சங்கத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும். அஞ்சலிக் கூட்டம் நிறைவுற வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சகல ராணுவ மரியாதைகளுடன் புனித விதை குழியில் வித்துடல் விதைக்கப்படும்.

## வடக்கு

இன்று வடக்கே தேர்தல் நடத்தப்படுவதாக தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக நடைபெறும் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸ் திணைக்களமே பொறுப்பாக இருப்பதாகவும் தாம் ஆலோசனை வழங்குவதாக தெரிவித்துள்ளார். வழமையை விட இம்முறை நடைபெறும் தேர்தல் மிகவும் சாதாரண நிலையில் நடைபெறும் என தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

தேர்தல் எந்த வகையில் முகம் கொடுக்கப்படும் என்பதைவிட, எப்படியும் நடத்தி முடிக்க வேண்டும் என்பதே எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பு எனத் தெரிவித்தார். எனவே எந்த நிலையிலும் என்னால் தேர்தல் நடத்த முடியாது என தெரிவிப்பதற்கு எனக்கு எந்தவித அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதை, தான் தெளிவாக தெரிவிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

# பொ. ஐ. மு. கூட்டத்தின் மீது அமைச்சர் தலைமையிலானகுழு சூடு

## ஐவர் படுகாயர்; எவரும் கைதாகவில்லை

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் அமைச்சர், மற்றும் மாகாண சபை உறுப்பினர் தலைமையில் சென்ற குழுவினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் ஐவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பொலநறுவை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் இத் துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றதாகவும் அச்சமயம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொலநறுவை மாவட்ட தலைமை வேட்பாளர் மைத்திரிபால சேனநாயக்க கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்திருந்ததாகவும் தெரியவருகிறது.

முன்னாள் பொலநறுவை மாவட்டபாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஒ. டி. வி. எக்கநாயக்க, மற்றும் மாகாணசபை உறுப்பினர் ஒருவரும் இத் தாக்குதலின் போது இருந்ததாக தெரியவருகின்றது.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக பொலிசாரிடம் முறையிட்டுள்ளதாகவும் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

## 189 பேருக்கு

வர்களுக்கு கையளிக்கும் வைபவம் எதிர்வரும் 11-ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு செயலகத்தில் இடம்பெறும்.

## மக்கள்

எடுக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள வெற்றிடங்களும் இம் மாதம் 17-ம் திகதிக்கு பின்னரே நிரப்பப்படும். இதேவேளை யாழ் மாவட்டத்தில் இரண்டு மக்கள் வங்கிக்கிளைகளை மீண்டும் திறப்பதற்கு மக்கள் வங்கி நிர்வாகம் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

## மீனவர் மீது

பித்துக் கொண்டார்.

ரோந்து செல்லும் கடற்படையினர் மீனவர்கள் மீது இப்புதிய தாக்குதலை மேற்கொண்டுவருகின்றனர். மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கற்கோவளம் பகுதியில்தங்கியிருந்தவரது கட்டுமரம் ஒன்றே இவ்வாறு சேதமானது. (யோ)

## கடற்படையினரின்

என்பவருமே சூட்டுக்கு இலக்காகியவர்களாவர்.

இவர்கள் இருவரும் கடற்தொழிலை முடித்து கரையை நோக்கி வந்துகொண்டிருந்த போது கரையை அண்மித்த கடற்படை இவர்களை இலக்குவைத்து சுட்டபோது பலியானார்கள். இவர்களது சடலமும் மீட்கமுடியவில்லை. இவர்கள் சென்ற படகின்

## யார் வெற்றி

எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்

பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்படும் சகல சட்டவிதிகளையும் பரிசீலனை செய்து அதற்கான அங்கீகாரத்தை வழங்கவேண்டியவர் தானே என்று மேலும் சுட்டிக்காட்டியதுடன் தனது கட்சியின் கொள்கையேஎந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அமுல்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

புதிய அமைச்சரவை ஆகஸ்ட் 25ஆம் திகதி கூடும் என்றும் அவர் கூறினார்

## புலிகள்

சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர் பாதுகாப்பு சம்பந்தமான உத்தரவுகளை அவர்கள் வழங்கியுள்ளனர்.

தாக்குதல் நடந்த சமயம் எத்தனை விமானங்கள் பலாலியில் நின்றன என்பதை கூற முடியாது முகாமில் நின்ற ஹெலிகப்டர் சேதமடைந்துள்ளது ஹெலிகப்டருக்கு அருகில் சென்று புலிகள் தாக்கவில்லை அது நின்ற இடத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் நின்றே புலிகள் அதை தாக்கியுள்ளனர். இதன் போது செய்தியாளர்கள் குறுக்கிட்டனர்.

பத்திரிகையாளர்: ஹெலியை கைப்பற்ற முயற்சிக்கப் பட்டதா?

பிரிகேடியர்: இல்லை

பிரதமர் ரணில்: ஹெலிகப்டரை செலுத்தும் திறமையை புலிகள் பெற்றிருக்கவில்லை,

பத்திரிகையாளர்: புலிகள் தேர்தலை குழப்பத்திட்டமிட்டுள்ளனரா?

பிரிகேடியர்: அப்படித் தெரியவில்லை கிழக்கில் மட்டும் சில அச்சுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர்: தீவுப்பகுதிக்கு பொலிசார் செல்ல அஞ்சுகின்றனரோ?

## தேடுதல் அதிகரிப்பு

(திருகோணமலை)

தேர்தல் தொடர்பாக திருமலை நகரில் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. பொலிசார் வீடு வீடாக தேடுதல் நடத்துகின்றனர். நேற்று முன்தினம் நகரில் பொலிசார் கடும் தேடுதல் வேட்டையில் இறங்கியிருந்தனர்.

# விடைத்தாள் எடுத்துச்செல்ல கப்பல் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 11 ஆம் திகதி அன்றுடன் முடிவடைகின்ற முதலாம்கட்டக.பொ.த உயர்தரப் பரீட்சைப் பாடங்களின் விடைத்தாள்கள் மறுநாள் 12 ஆம் திகதி கொழும்புக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எதிர்வரும் 12 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து பருத்தித்துறை வந்து சேரவுள்ள ''நரோமா'' கப்பலிலேயே இப் பரீட்சை விடைத்தாள்கள் எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளதாக மேலும் தெரியவருகின்றது.

அத்துடன் இவ் விடைத்தாள்களுடன் யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவரும் செல்வதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா, தி)

## ஜனாதிபதி

பாராளுமன்ற ஆட்சிக்கு மட்டும் மக்கள் கொடுக்கும் தீர்ப்பாக கருதமுடியாது என்றும் இது ஐ.தே.க ஜனாதிபதிக்கு எதிராக மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பாக கருத வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கண்டெடுப்பு

ஆண்களுக்கான கசியோ கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



# "நல்லை முருகன் பாடல்கள்"

[பாடல் ஒலிப்பதிவு நாடா]

**கவிஞர் புதுவை இரத்தினதுரையின்**
**பாடல்களை**
**கண்ணனின் இசையில்**
**வர்ணராமேஸ்வரன் பாடியுள்ளார்**

இனிமையும் பொருட்சுவையும் இணைந்த கனிவுதரும் இந்தப் பாடல்களை நீங்களும் கேட்டு மகிழுங்கள்! மனதில் புத்துணர்ச்சி பெறுங்கள்!!

**ஒலிப்பதிவு நாடா ஒன்றின் விலை ரூபா: 175.00**

கிடைக்கும் இடங்கள்:-

**யாருதி வீடியோ விஷன்**
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

**சண் றைக்கோடிங் பார்,**
நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

(9053)


சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் ஆலயம் 8 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

## சிறப்பு சொற்பொழிவு

செஞ்சொற் கொண்டல்
**ஆறு. திருமுருகன்**
இன்று மாலை 5 மணி முதல் 6 மணி வரை
விடயம்:- திருவாசகம் என்னும் தேன்

(சி-10069) 8ஆம் திருவிழா உபயகாரர்

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

என்பதை, தான் தெளிவாக தெரிவிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

### அடையாள

தவிர அத்தியாவசியச் சேவைகள் எதுவும் இயங்காதெனவும் ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

### 42 மணி நேரம்

யேறிவிட்டதால் விமான இழப்பு தவிர்க்கப்பட்டது எனவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

வடபகுதியில் படையினரின் கூட்டுத் தாக்குதலை தவிர்க்கும் முகமாக கடல்வழியாக மீண்டும் உட்புகுந்து ஒரு தாக்குதலை புலிகள் நடத்தலாம் என இராணுவ அதிகாரிகள் கருதுகின்றனர். தீவின் மேற்கு பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என உத்தரவாதம் தரமுடியாது என அதிகாரிகள் கூறுகின்றனர்.

படைக் காவலரண்களுக்கு பின்புறமாக தாக்குதல் நடத்த புலிகளின் உயர்பீடம் தாக்குதல் அணிகளை தயார் செய்துவருவதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர் எனவும் அப்பத்திரிகை கூறுகிறது

### அரசாங்க

கான புதிய சம்பளத் திட்டம் 35,645 ரூபாவிலிருந்தும் 'அ' தரத்திற்கான சம்பளம் 29,400 ரூபாவிலிருந்தும் ஆரம்பிக்கும்.

அகில இலங்கை முகாமைத்துவ கூட்டிணைப்பு சேவையினரின் சம்பளங்கள் ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 400 ரூபாவிலிருந்து ஆரம்பித்து இரண்டு லட்சத்து 5800 ரூபாவில் முடிவடையும்.

அரசேவை"யில் உள்ள சிறிய மற்றும் கனிஷ்ட தரத்தினரின் ஆரம்ப, இறுதி நிலை சம்பளங்களையும் மூன்று சம்பள உயர்வு தொகையினால் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

யானார்கள். இவர்களது சடலமும் மீட்கமுடியவில்லை. இவர்கள் சென்ற படகின் என்ஜினும் சேதமடைந்தது.

கடந்த ஐந்து மாதங்களில் இதே இடத்தில் பதினொரு அப்பாவி மீனவர்கள் கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி பலியானார்கள். (யோ)

### மாவீரர்களுக்கு

அண்மித்து மாவீரர்களது உருவப்படங்கள், உருவப்பட பந்தலில் வைக்கப்பட்டவுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந் நிகழ்வுகள் வலிகாமத்தில் கோண்டாவில் பஸ் டிப்போ முன்பாகவும்.

தென்மராட்சியில் மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவிலடியிலும்.

வடமராட்சியில் பருத்தித்துறை பஸ்நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வுகளில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

### கரும்புலிகள்

காரப் பந்தல்கள், அஞ்சலிக் கீதங்கள், எழுச்சிப் பாடல்கள் என குடாநாடெங்கும் எழுச்சிசர நிகழ்வுகள் நடைபெற்றுவகிருன்றன.

வீரச்சாவடைந்த கரும்புலிகளது உருவப் படங்களைத் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் குடா நாட்டின் அனைத்து பிரதானவீதிகளின் ஊடாக பவனி வந்ததை அவதானிக்க முடிந்தது.

இவற்றைவிட பிரதான வீதிகளிலும் கேந்திர இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டிருக்கும் கரும்புலிகளது உருவப் படங்களுக்கு மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்துவதையும் அவதானிக்க முடிந்தது.

மேலும் இன்றைய தினம் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய மூன்று பகுதிகளிலும் விசேட கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

(க)

விடப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர்: தீவுப்பகுதிக்கு பொலிசார் செல்ல அஞ்சுகின்றனரே?

கலாநிதி விக்கிரம வீரசூரிய: தேர்தல் நடத்த தேர்தல் ஆணையாளரே நடவடிக்கை எடுக்கின்றார் பாதுகாப்பு நடவடிக்கையை அவர் கவனிப்பார்

### வடக்கு-கிழக்கு

ப்பு நடவடிக்கைகளையும் பொருட்படுத்தவில்லை. அதனை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர் என்றார்.

தற்காலிக இணைப்பு என்ற பெயரில் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்த ஐக்கிய தேசியக் கட்சியினர், அது தொடர்பாக கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் எனக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். அரசாங்கம் நினைத்தால் ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் இவ் இணைப்பை இல்லாது ஒழித்து விடமுடியும்,

இவ்வளவு துரோகங்களையும் செய்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை தொடர்பாக தெரிவிக்கும் கருத்துக்களையும் குழப்புவதற்கு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

மாகாணசபை தொடர்பாக என்னிடம் கருத்து கேட்க வந்த ஜனாதிபதியின் செயலாளருக்கு நான் எந்தவித கருத்தையும்தெரிவிக்கவில்லை ஆனால்நான்கூறியதாகஐ.தே கவினர் தெரிவித்து வரும் கருத்துகள் விசமத்தனமானவை என்றார்

மேலும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் முஸ்லிம் காங்கிரசும் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து, தான் பரிசீலித்ததாகத் தெரிவித்த அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் அதில் ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம் செய்வதைப் போன்று ஆபத்தான விடயங்கள் எதுவுமில்லை எனத் தெரிவித்தார்.



## 2ஆம் லெப். எழில்ராஜ்

திருக்கோயில், அம்பாறை

தாயக மண்ணில்: 1973-12-1

வீரச்சாவு: 1993-8-7

அன்னை துயர் துடைக்க
புலிகள் அணியில் இணைந்து
வெங்களம் ஆடிய வீரனே
புலி வீரனே.

உன் இலட்சியப் பாதையில்
வரும் தடைகளை உடைத்தெறிந்து
வீர நடை போட்டவனே! எழிலே
தமிழீழ எல்லைவரை கால் பதித்து நடந்தாயே.

உன் முகம் எங்கள் விழி
முன் அகலாது உள்ளதடா
உன்கனவை நினைவாக்குவோம்.

லெப். கேணல் நவம் அறிவுக்கூடம்

((9051)

## நன்றி நவில்கின்றோம்

**அமரர் திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி** அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்கள், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபித்தவர்கள், பிரார்த்தித்தவர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

''சௌமியம்'',
124, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

K. S. லோகேஸ்வரன்
குடும்பத்தினர்
(9052)